Reg. M. 2330

உ

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு

மலர் 26 | விஜய சித்திரை 1953 ஏப்ரல் | இதழ் 4

நாட்டு ஒலி

1. "மேல்நாட்டுச் சமயக் கொள்கைகளுக்கும் கீழ்நாட்டுச் சமயக்கொள்கைகளுக்கும் ஒரு பெருத்த வேற்றுமை உண்டு. மேல் நாட்டுச் சமயக்கொள்கைகள் எல்லாம் நம்பிக்கை என்ற அஸ்திவாரத்தின் பேரில் கட்டப்பட்டிருக்கின்றன. கீழ்நாட்டுச் சமயக்கொள்கைகளோ அறிவு என்ற அஸ்திவாரத்தின் பேரில் நிற்கின்றன. மேல் நாட்டுச் சமயங்களில் எதை எடுத்தாலும் 'நீ இதை நம்பவேண்டும், ஏன் என்ற கேள்வி கூடாது,' என்று குருமார்கள் உபதேசிப்பார்கள். கீழ்நாட்டுச் சமயங்களில் மாணாக்கன் 'ஏன்' என்று தாராளமாய்க் கேட்கலாம். அதற்கு ஆசிரியன் விடை சொல்லி ஆகவேண்டும். பெரும்பான்மையான சமய நூல்கள் எல்லாவற்றிலும் ஆசிரியனுக்கும் மாணாக்கனுக்கும் சம்வாதமுறையில் அதாவது கேள்வி, விடை முறையில் சந்தேகங்கள் தெளிவு படுத்தப்படுகின்றன. மாணாக்கனின் பகுத்தறிவுக்கு ஒவ்வாது போகுமாயின் அவன் அக்கொள்கையை ஏற்றுக்கொள்ள வேண்டிய நியதி இல்லை. மாணாக்கன் பகுத்தறிவு என்னும் கோலால் அளந்து உண்மை அறிந்துதான் ஒரு கொள்கையை ஏற்றுக்கொள்வான். அவ்வாறு மேல் நாட்டுச் சமயங்களில் இல்லை. அச்சமயங்களுக்கு பரம் பொருளால் வெளியிடப் பட்ட சமயங்கள் என்ற ஒரு பெருமை வாய்ந்த பட்டயம் உண்டு. (Revealed Religions) ஆகவே, அவைகள் மனித அறிவுக் கெட்டாமல்

வெகு தொலைவிலிருந்து வந்தவைகள்; மனிதன் அவைகளை ஐயம் கொள்ளாது ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளான் என்பது அதன் பொருள்: கடவுள் ஆண் மகன் ஒருவனை உண்டு பண்ணி அவனிலிருந்து பெண்மகளை உண்டாக்கி அவர்களுக்காக மற்ற உயிர்களையும் பொருள்களையும் ஏழுநாளில் உண்டாக்கினான். அவ்விருவரும் கடவுளுடைய கட்டளைக்கெதிராக அறிவுக்கனியை உண்டதினால் நிரந்தரமான பாபத்தை ஏற்றுக்கொண்டு சாவு முதலிய கேடுகளைத் தமக்கும் தம் சந்ததியாருக்கும் விளைவித்துக் கொண்டார்கள் என்பது யூதர்களின் முதற் கொள்கை. அதையே மற்றவர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இக்கதை பகுத்தறிவுக்கு ஏற்றதாயில்லை. விஞ்ஞானத்திற்கும் மாறாக இருக்கிறது. வளர்ச்சி தத்துவ இயலுக்கும் எதிரிடையானது. இனி ரொட்டியும், ரசமும் உண்டபின் நிணமும், குருதியும் ஆகின்றதென்பது அறிவுக்கு அடங்குமா? 'இறைவனுக்கு ஒரே தீர்க்க தரிசிதான் உண்டு; அவரால்தான் மேன்மையடையக் கூடும்; அவரே இறைவனுடைய எண்ணங்களை புனித நூலில் எழுதி வைத்திருக்கின்றார்; அதை நம்பித்தான் ஆகவேண்டும்' என்ற கொள்கையும் சிறப்புடையதா? இவைகளை ஆராய்ந்து பார்த்தால் மேற்கு நாட்டுச் சமயங்கள் நம்பிக்கை என்ற பீடத்தின் பேரில் கட்டப்பட்டிருக்கிறதாகத் தெரியவில்லையா? கீழை நாட்டுச் சமயங்களோ சிறப்பாகப் பரதகண்டத்துச் சமயங்கள் அர்த்தமற்ற நம்பிக்கையின் பேரில் சார்ந்திருக்காமல் உயர்வு பொருந்திய பகுத்தறிவின் பேரில் சார்ந்திருக்கிறது என்று அறியவேண்டும். ஆகவே மேற்கு, கிழக்கு என்ற பிரிவினைகளுக்கு நம்பிக்கை பகுத்தறிவு என்ற பண்புகள் அடையாளங்களாக இருக்கின்றன என்று அறிய வேண்டும்."

2. "மேல் நாட்டுச் சமய நூல்களில் சில கதைகள் வரலாறுகளாகக் கூறப்பட்டுள்ளன. அவைகளே அச்சமயங்களுக்கு அடிப்படையான நெறிகளைக் கொண்டிருக்கின்றன. அக்கதைகளைச் சொல்லித்தான் நெறிகளை விளக்க வேண்டியிருக்கின்றன. அக்கதைகளை நம்பினால்தான் நெறிகளுக்கு மேன்மைவரும். கடவுள் படைத்த உலகில் 4000 ஆண்டுகள் வரை நல்லவர்கள் பலரும், தீயவர்கள் பலரும்

பிறந்திருக்கலாம். அவர்களில் நல்லவர்களுக்கு நன்மையும் தீயவர்களுக்குத் தண்டனையும் அளிக்கப்படும். நல்லவர்களில் சிலர் தீர்க்க தரிசிகளாகத் தோன்றிப் பின்னுல் வரும் செய்திகளைக் கூறியிருக்கிருர்கள். இறைவனுக்கு ஓரே மகன் உண்டு. அவன் தேவகுமாரன். அவன் உலகில் தோன்றிப் பாவம் செய்த மக்களுக்குத் தன் உயிரைக்கொடுத்து, இரத்தத்தைச் சிந்தித் தியாகம் செய்தார். அந்தவகையில் மனிதகுமாரன் ஆனுர். அவர் மூலமாயன்றித் துறக்கம் அடைய முடியாது. இதுதான் மேற்கு நாட்டுச் சமயக் கொள்கை. கிழக்குச் சமயங்களிலோ கடவுளுக்கு ஒரே மகன் என்பது இல்லை. எல்லா உயிர்களும் இறைவனுடைய மக்களே. எல்லா உயிர்களும் இறைவனை அடையலாம். தங்கள் தங்கள் வாழ்க்கையின் தூய்மையினுல் இறை வனின் பொற்பாதங்களை மனிதன் முதற்கொண்டு கொசு (அமீபாவும்) ஈருக உள்ள எல்லா உயிர்களும் ஒரு காலத் தில் ஈடேற முடியு மென்பது கீழை நாட்டுத் தத்துவ முறை.''

3. ''மேலும் மக்களுக்காகத் தன் உயிரைக் கொடுத்த தேவகுமாரன் ஒருவர் மூலமாயன்றி மனிதர்கள் ஈடேற முடியாததினுல் அத்தேவகுமாரன் மனிதகுமாரனுக, உல கத்தில் அவதரித்த பிறகுதான் மக்கள் வீடுபெற முடியும். அதாவது 2000 வருடங்களுக்கு முந்தி உலகில் தோன்றிய எந்தமகனும் வீடுபெறமுடியாது. 2000 ஆண்டுகளுக்குப் பிந்தியும் நாளது வரையில் உலகில் தோன்றிய மக்களில் மனிதகுமாரனின் மூலமாயன்றி வீடுபேறு பெற முடியாது. தேவகுமாரன் பெயரைச் சொல்லி கடவுள் வணக்கம் சொன்னுலன்றி வீடுபேறு கிடையாது. ஆகையால் உலகில் இருக்கும் மூன்றில் இரண்டுபங்கு மக்கள் வீடுபேற்றிற்குத் தகுதியில்லாதவர்களாய் இருக்கிருர்கள். இல்வாறு மேல் நாட்டுச் சமய நம்பிக்கை இருக்கக் கீழ்நாட்டுச் சமயங்கள் அக்கொள்கையை ஒரு சிறிதும் ஒத்துக்கொள்ளுகிற தில்லை. எந்த மனிதனு யிருந்தாலும் எந்த சமயத்தானு யிருந் தாலும் அவன் ஒழுங்காக வாழ்க்கை நடத்தும் பட்சத்தில் அவன் வீட்டுப் பேற்றிற்கு உரியவன் ஆகிருன். இந்த கொள்கை கொண்ட கீழை நாட்டுச் சமயம் எத்தனைச் சிறப்பாக அமைந்திருக்கிறது பாருங்கள்!''

4. "மேலும் மக்களுக்கு மட்டும் ஆன்மா உண்டு. அவ்வான்மாவுக்கு வீடுபேறு உண்டு. மற்ற உயிர்களுக்கு ஆன்மா இல்லை, வீடுபேறும் இல்லை, மற்ற உயிர்கள் எல்லாம் மக்களின் பிழைப்பிற்காகவே உண்டாக்கப்பட்டன. ஆகவே அவைகளின் உடல்களைக் கொண்டு மக்கள் பிழைக்கலாம். இதுதான் மேல்நாட்டுச் சமயங்கள் கூறுவது. ஆனால் கீழை நாட்டுச் சமயங்களோ மக்களைப் போலவே எல்லா உயிர்களுக்கும் ஆன்மா உண்டு, மக்களுக்காக ஏனைய உயிர்கள் பிறப்பிக்கப்படவில்லை, மக்களின் ஆன்மா வீடுபேற்றிற்குத் தகுதி வாய்ந்து இருப்பதுபோல் எல்லா உயிர்களும் தகுதி பெற்றவைகள்தான். தாழ்ந்த உயிர்கள் அனுபவத்தாலும் முயற்சியாலும் மேல் நிலைமை அடையலாம். தாதுவர்க்கம் தாவரவர்க்கமாக வளர்ந்தும், தாவரவர்க்கம் மிருகவர்க்கமாய் வளர்ந்தும், மிருகவர்க்கம் மானுடவர்க்கமாய் வளர்ந்தும், மானுடவர்க்கம் தேவவர்க்கமாய் வளர்ந்தும், சோபான முறையில் உயர்ந்து செல்வதே வளர்ச்சித் தத்துவமாகும். அத்தத்துவத்தைக் கீழை நாட்டு அறிஞர்கள் பண்டைக்காலம் முதலே அறிந்திருக்கின்றார்கள். அம்முறையில் உடல்வளர்ச்சி என்ற ஒரு பகுதியை மட்டும் மேற்கத்திய விஞ்ஞானிகள் ஆராய்ச்சி வழியில் தற்போது ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதனை மேற்குச் சமயங்கள் இன்னும் அறியவில்லை. ஆன்மா வளர்ச்சியைக் குறித்து மேற்கு நாட்டுச் சமயமாவது, கலையாவது இன்னும் அறியவில்லை."

5. "மேற்குச் சமயங்களின்படி மனிதனுக்கு ஒரே பிறப்புதான் உண்டு. நல்லது செய்தால் துறக்கமும், தீமை செய்தால் நிரயமும் கிடைக்கும். இறந்தபிறகு உயிர்கள் தீர்ப்பு நாள் வருகிறவரையில் காத்துக் கொண்டிருக்க வேண்டும். தீர்ப்பு நாளின்போது உயிர்களை அழைத்து அவர்கள் செய்த புண்ணியபாவங்களுக்குத் தக்கபடி இறைவனால் தீர்ப்பு அளிக்கப்படும்; துறக்கமோ, நிரயமோ ஒரு முறை விதிக்கப்பட்டால் அவைகளை விட்டுத் தப்பி வருவது இல்லை. இதைப்போல் கடுமையான தீர்ப்பு எங்கும் இல்லையல்லவா? மறுபிறப்பு என்பது ஒன்றில்லாமையினால் இந்த ஏற்பாடு அமைக்கப் பட்டிருக்கிறது. ஆனால் கீழைநாட்டுச் சமயங்களிலோ ஆன்மாக்களுக்குப்

பலபிறப்புக்கள் உண்டு. ஒரு பிறப்பில் செய்த வினையை ஒத்து மறுபிறப்பு ஏற்படும். இந்த வகையில் பல பிறப்புக்கள் எடுத்த அனுபவத்தினால் வீடுபேறு அடையலாம். இந்த முறையிலே எவ்வித ஆன்மாவும் சுவர்க்கத்தையும், நரகத்தையும் இருவினைகளுக்கு ஏற்ப இடையிடையே அனுபவித்தபிறகு ஒவ்வொரு பிறப்பிலும் முதிர்ச்சிபெற்று இறுதியில் வீடுபேற்றினை அடையும். மேற்கு நாட்டார்கள் எண்ணியிருக்கும் உலகிய சுவர்க்க நரகங்கள், இறுதியாக ஏற்படுவது இல்லை. அவைகளுக்கு மாறாக, எப்படிப்பட்ட ஆன்மாவும் இறுதியில் பேரின்பம் அடையக்கூடும். மேற்கு நாட்டார்கள் அறியாததொன்று கீழைச் சமயங்களில் உண்டு. அதுதான் வினைத்திட்பமும், மறுபிறப்பும் என்பன. இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் என்பவைகள் மேற்கு நாட்டார் அறியாத உண்மைத்தத்துவங்கள் என்க.''

6. ''இனி வாழ்க்கைத் திட்டத்திலும் வேறுபாடு உண்டு. சமய வாழ்க்கையையே கீழ் நாட்டுச் சமயங்கள் வற்புறுத்துகின்றன. வாழ்க்கையைத் தத்துவ முறையில் வகுத்து அதற்கேற்ற விதிகளையும், விலக்குகளையும் கீழை நாட்டு நூல்கள் விவரிக்கின்றன. மேல் நாட்டுச் சமயங்களில் ஒழுக்கநெறி ஒன்றுதான் உண்டு. கீழ் நாட்டுச் சமயங்களிலோ வீடுபேற்றிற்குக் கொண்டு செலுத்தும் தத்துவ முறைகள் எல்லாம் உண்டு. ஒரு உதாரணம் கூறுவோம். இயேசு மக்களுக்கு உபதேசித்த முக்கியமான முறை ஒன்றுதான். அதாவது துறவியல். அவரை அண்டிக் கேட்ட மக்களுக்கெல்லாம் 'நூல்களில் கூறியிருக்கும் கட்டளைகளின்படி நடந்து கொள்வது மட்டும் போதாது; உன்னுடைய உடைமைகளெல்லாம் மற்றவர்களுக்குக் கொடுத்துவிட்டு என்னுடன் சேவை செய்ய வா; உடல், பொருள், ஆவியும் இறைவனுக்குத் தத்தம் செய்து விடு' என்பதே ஆகும். 'இது கடுமையான துறவு. இது எல்லாராலும் முடியாது. பக்குவமடைந்தவர்களுக்கு மாத்திரம் முடியும். இந்தத்துறவுக்கு முன் மூன்று படிகள் இருக்கின்றன. அவைகளை அனுபவித்தபின்தான் கடுந்துறவுக்குச் செல்ல முடியும்' என்று கீழை நாட்டு நூல்கள் கூறுகின்றன. இல்லறத்திலிருந்து கொண்டு பொருளை சம்பா

தித்து இன்பம் துய்த்த பிறகுதான் வீடுபேற்றிற்காகத் துறவு பூணவேண்டும். வாழ்க்கை நெறியை அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு பால்களாகப் பிரித்தது கீழை நாட்டுச் சமயங்கள்தான். இந்த முறையிலன்றி எவனும் சோபான முறைகளில் முன்னேற முடியாது. ஆகவே மேல் நாட்டுச் சமய முறைகளுக்கும், கீழ்நாட்டு முறைகளுக்கும் எத்தனை வேறுபாடுகள் காண்கிறோம். எந்த முறை உத்தம மானதென்று நீங்களே அறிவீர்கள். அறியாத மக்களுக்கு இவைகளை அறிவித்தால் எந்த அறிவாளியாவது பிறமதங் களில் புகுவானா? இந்த நிலைகளைத் தீர ஆலோசித்து ஒரு தூசியையும் வெளியில் போகாதபடி பாதுகாப்பது உங்கள் கடமை.''

7. மேலே கூறிய உபதேச மொழிகள் மண்டைக் காட்டு ஹைந்தவ சங்க சம்மேளனத்தில் அங்கு வந்திருந்த அறிஞர் பெருமக்களால் நன்கு விளக்கப்பட்டன. மண்டைக் காடு என்பது தென் திருவிதாங்கூரில் கடற்கரையிலுள்ள ஒரு புனித ஊர். அங்கே பச்சைப்பசேல் என்ற தென்னந் தோப்புகள் இடையே இயக்கிஅம்மன் என்ற தேவியின் திருக்கோயில் ஒன்று இருக்கின்றது. அந்த அம்மன் திரு உரு ஒரு இயற்கைப் புற்றிடை அமைந்திருக்கின்றது. ஒவ் வொரு ஆண்டிலும் மாசித்திங்களில் ஐந்து நாள் உற்சவம் கொண்டாடப்பட்டு வருகின்றது. ஆண் பெண் குழந்தை கள் உட்பட பல்லாயிரக்கணக்கான பேர்கள் அம்மனுக்கு வழிபாடு செய்ய ஐந்து நாட்களும் வருகிறார்கள். அந்தச் சமயத்தில் ஹைந்தவசேவக சங்கத்தார்கள் அறிஞர்களின் சம்மேளனம் கூட்டிப் பொதுமக்களுக்கு உபதேசங்கள் செய்கிறார்கள். அச் சம்மேளனத்தில் வருகிறவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்யப்படுகின்றன. உதயம் முதல் நடுநிசிவரையில் சடங்குகளும் பேச்சுக்களும் நடந்த வண்ண மாகவே இருந்தன. வேள்வி, பஜனை, பேச்சு, இன்னிசை முதலியவைகள் ஒழுங்காக நடைபெற்றன. வடநாட்டி லிருந்து சில அறிஞர்களும், துறவிகளும், அதில் கலந்து கொண்டார்கள். தமிழ் நாட்டிலும் மலையாளத்திலு மிருந்து பல பெரியார்கள் சேவை புரிந்தார்கள். தமிழ், மலையாளம், ஹிந்தி, ஆங்கிலம் என்ற மொழிகளில் பேச்சு கள் நிகழ்ந்தன. ஹிந்திப் பேச்சுக்களும், ஆங்கிலப் பேச்சுக்

களும் தமிழிலும் மலையாளத்திலும் மொழி பெயர்க்கப் பட்டன. அவைகளில் சிறந்த உபதேசங்கள் வடநாட்டி லிருந்து வந்த பெருமக்களால் இயற்றப்பட்டன. அவை களின் சாரம்தான் மேலே கண்டவைகள்.

8. வடநாட்டிலிருந்து வந்த பெரியார்களில் சிறந்தவர் கள் சுவாமி அஹகாநந்தர், பண்டிதர் தர்மதேவர், பண்டிதர் சிவசுவாமி சுவாமி தபசியாநந்தர் முதலியோர்கள். இவர்கள் எல்லாரும் வடமொழியிலும் ஆங்கிலத்திலும் சிறந்தபுலமை பெற்றவர்கள். அவர்களில் அஹகாநந்தர் என்பவர் காசிப் பல்கலைக் கழகத்தில் தத்துவப் பேராசிரியரா யிருப்பவர். பூர்வாசிரமத்தில் டாக்டர் பிஷர் (Fischer PhD.) என்ற பெயருடன் விளங்கினவர். ஆங்கில இராணுவவீரருக்கும், ஜெர்மானிய மாதுக்கும் தோன்றிய பெரியார். ஐரோப்பிய மொழிகள் பலவற்றிலும் பாண்டித்தியம் பெற்று கணக் கற்ற சமய நூல்களை முதல் மொழியிலேயே படித்தும், இந்திய மொழிகளில் சம்ஸ்கிருதம், ஹிந்தியும் நன்ருக வாசித்துக் காசிப் பல்கலைக் கழகத்தில் போதகாசிரியரா யிருந்து வருகின்ருர். மற்றப் பெருமக்களும் அன்னுரைப் போலவே மற்ற மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றவர் கள். இப்படிப்பட்ட அறிஞர்கள் சம்மேளனத்தில் பங் கெடுத்துக் கொண்டது நாடு செய்த தவமேயாகும். இதற் கெல்லாம் மூல காரணமாக இருந்து பணி செய்கின்றவர் ஹைந்தவ சங்கத்துச் செயலாளராகிய திரு. வேலாயுதம் பிள்ளை அவர்கள். அறநிலையக் காப்பாளர்கள், பெரிய அலுவலாளர்கள் முதலியோர்கள் எல்லாம் பங்கெடுத்துக் கொண்டார்கள். இராஜப்பிரமுகர் சம்மேளனத்தைத் திறந்து வைத்தார். ஐந்து நாள்கள் சமயச்சேவை நன்ருக நடைபெற்றது. இவ்வாறு ஏனைய நாடுகளிலும் சமய பிரசாரங்கள் நடைபெற்ருல் நமது மக்கள் அஞ்ஞான இருளிலிருந்து ஞான ஒளிபெற்று மேன்மை அடைவார்கள் அல்லவா?

2. தலப்பகுதி

ஈரோடு - தொண்டீசுவரம்

(கோவைகிழார்)

1. இடம் : ஈரோடு ஒரு பெரிய ஊர். காவேரியின் மேற்குக் கரையில் சென்னை – கோழிக்கோடு இருப்புப்பாதையில் ஒரு சந்திப்பு நிலையமாக இருக்கின்றது. அதே பெயர் கொண்ட தாலூக்காவின் தலைநகரமாகவும் 57,000 ஜனத்தொகை கொண்டதாகவும், நகர ஆட்சி மன்றம் கொண்டதாகவும், குடிநீர் வசதி, மருத்துவச்சாலை, கல்வி நிலையங்கள் முதலியவைகள் உள்ளதாகவும் இருக்கின்றது. ஊருக்கும் காவேரி ஆற்றுக்கும் இடையில் காளிங்கராயன் வாய்க்காலின் நீர்ப்பாய்ச்சல் வசதி செழிப்பாக இருக்கின்றது. வாணிபத்துறையில் பேர்பெற்ற ஊர். ஊருக்கு வடபுறத்தில் உள்ளது கோட்டை என்ற பகுதி. அதில் தெருக்கள் ஒழுங்காகவும், நேராகவும் மாடவீதிகளாகவும் அமைந்திருக்கின்றன.

2. கோயில்கள் : ஈரோட்டுக் கோட்டையில் சிவாலயம் ஒன்றும், பெருமாள் கோயில் ஒன்றும் அடுத்தடுத்து அமைந்திருக்கின்றன. சிவாலயச் சந்நிதி கிழக்கு நோக்கியும், பெருமாள் சந்நிதி தெற்கு நோக்கியும் உள்ளபடியால் வழிபடுபவர்கள் ஒரே இடத்திலிருந்து இரண்டு மூர்த்திகளையும் ஒருங்கே வழிபட முடியும். இரண்டு கோயில்களுக்கும் தனித்தனி மூலத்தானங்களும், மண்டபங்களும், பிராகாரங்களும், கோபுரவாயில்களுமுண்டு. இரண்டு கோயில்களும் கருங்கல் திருப்பணி செய்யப்பட்டிருக்கின்றன. கோயில்கள் காற்றேட்டமுள்ளனவாகவும், நல்ல வெளிச்சமுள்ளனவாகவும் தூய்மை உள்ளனவாகவும், ஆக்கப்பெற்றிருக்கின்றன.

3. சிவாலயம் : இது கிழக்குப் பார்த்த சந்நிதி, சந்நிதித்தெரு நேர்க்கோடாக ஒழுங்காக அமைந்திருக்கின்றது. சுற்றிலும் மாடவீதிகள் உண்டு. இறைவன் பெயர் தொண்டீசுவரமுடையார். சில கல்வெட்டுக்களில்

தொண்டகமுடையார் என்றும் கண்டிருக்கின்றது. இறைவன் திருக்கையில் தொண்டகம் ஏந்தியிருக்கும் வகையில் இப்பெயர் வந்ததோ அறியோம். தொண்டகம் என்ருல் குறிஞ்சி நிலப்பறை. பசு கவரும்போது கொட்டும் பறைக்கும் அப்பெயர் உண்டு. இனி தொண்டீசர் என்று கொள்ளும்போது பழமையான ஈசர் என்ற பொருளும் அடியார்களைத் தொண்டு அல்லது அடிமைத்தனம் செய்யும்படி ஏற்றுக்கொள்பவர் என்றும் பொருள்படும் இவ்விரு பெயர்களே பண்டைப் பெயர்கள். இவைகளே சிவாலயத்திலும் பெருமாள் கோயிலிலும் உள்ள சுவர்களில் காணப்படுகின்றன. இப்படியிருக்கப் பண்டைய வரலாற்றை அறியாத கோயில் பூசகர்கள் இறைவனுடைய பெயரை அர்த்தகபாலீசுவரர் என்று சொல்லத் தொடங்கிவிட்டார்கள். அப் பெயர் ஈர+ஓடு என்று பதப் பிரிவு செய்து கொண்ட வகையில் புராண ரீதியாகப் பொருள் படுத்திக் கொண்டதென்று அறியவேண்டும். ஈரோடு என்ற பெயரின் சரியான பிரிவு இரு—ஓடை என்பதாகும். இதற்கே கல்வெட்டுச் சான்றுகள் உண்டு. இனி இறைவியின் பெயர்.

இறைவியின் ஆலயம் இறைவனின் வலது புறத்தில் அமைந்திருக்கின்றது. தென்முகக் கடவுளின் திருவுருவம் (தக்ஷிணமூர்த்தி) வெகு அழகாக அமைந்திருக்கின்றது.

4. பெருமாள் கோயில் :—தெற்கு பார்த்த சந்நிதி, மூலத்தானமும் முன்மண்டமும் நிலமட்டத்தின்மேல் 3, 4 அடி எடுத்துக்கட்டியிருக்கின்றன. சுவாமியின் பெயர் பள்ளிக்கொண்ட பெருமாள். தற்போது இரங்கநாதர் என்று கூறப்படுகின்ருர். தென்மேற்கு மூலையில் ஒரு சிறு மண்டபத்தில் இரகுநாத ஆலயம் இருக்கின்றது.

5. வரலாறு : இரண்டு கோயில்களிலும் 10-கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இவைகளை ஆராய்ந்து ஒழுங்குபடுத்திப் பார்த்தால் ஈரோட்டின் பண்டைய வரலாறு தெரியும். ஈரோடு ஒரு பாடல் பெற்ற தலம் அல்ல. சோழன் பூர்வபட்டயத்தில் கண்டபடி சோழனுல் திருப்பணி செய்யப்பட்ட 36-கோயில்களுள் ஒன்றுமல்ல. ஆனல் சோழ சாம்ராஜ்ய காலத்தில் கட்டப்பட்டு அக்காலத்து

அரசர்களால் தான தருமங்கள் செய்யப்பட்ட கோயில் களுள் ஒன்று ஆகும். முதல் முதற் கல்வெட்டு 'மதிரை கொண்ட' சோழனான பராந்தகன் காலத்தது. அதன்படி பள்ளிகொண்ட பெருமாள் கோயிலில் வெண்ணெய்க் கூத்த நாயனார் திரு உருவம் தாபிக்கப்பட்டது என்று அறிகிறோம். பிறகு கொங்கு சோழர் காலத்தில் இரவிகோதை என்ற கொங்கு சோழனுடைய 4, 22 ஆண்டுக் கல்வெட்டுக்களில் அவ்வரசன் கோயிலுக்குக் கொடுத்த தானங்கள் கூறப்பட் டுள்ளன. பிறகு கொங்கு பாண்டியரில் ஒரு கல் வெட்டில் ஈரோட்டின் பெயர் மூவேந்திர சோழ சதுர்வேதிமங்கலம் என்று குறிக்கப்பட்டுள்ளது. பிறகு ஹொய்சள வீரவல் லாள தேவன் காலத்தில் ஒரு பூதானம் செய்யப்பட்டது. பிறகு விஜயநகரத்தார் காலத்திலும், நாயகர் காலத்திலும் மைசூரார் காலத்திலும் சில கல்வெட்டுக்கள் காணப்படு கின்றன. 1672-ல் நடந்த ஈரோட்டுச் சண்டையில் மதுரை யார் தோற்றுப்போக ஈரோடு மைசூர்வசம் சேர்ந்துவிட் டது. இந்த வரலாற்றைக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

6. கோயில் தற்கால நிலை: திருக்கோயிலில் வழி பாடுகள் ஒழுங்காகத் தமிழ் முறையில் நடைபெறுகின்றன. இது மிகச் சிறப்புப் பொருந்தியது. வாரவழிபாடுகளும், சொற்பொழிவுக் கூட்டங்களும் அடிக்கடி நடைபெறுகின் றன. ஆலய வழிபாட்டில் மக்களுக்கு ஆர்வம் மிகுதி என்று நேரில் கண்டு அறியலாம்.

---

2. திருப்பாதிரிப்புலியூர்

(சு. சுவாமிநாத தேசிகர்)

"ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாயுடன் தோன்றினராய்
மூன்றா யுலகம் படைத்துகந் தான்மனத் துள்ளிருக்க
ஏன்றா னிமையவர்க் கன்பன் திருப்பா திரிப்புலியூர்த்
தோன்றாத் துணையாயிருந்தனன் தன்னடி யோங்களுக்கே" 1

முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொரு ளாய் பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனாய் விளங்கும் இறைவன் சிற்றறிவும் சிறுதொழிலும் உடைய

ஆன்மாக்கள் தன்னை வழிபட்டுப் பிறவிப் பெருங்கடலைக் கடந்து எப்பொழுதும் ஒரே தன்மைத்தாய் முத்தியின்பம் பெறும் பொருட்டுத் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கின்ற தலங்கள் பல இருப்பினும் அவற்றிற் கெல்லாம் தலைசிறந்து சிறப்புற்று விளங்கி நிற்கும் தலம் இத் திருப் பாதிரிப் புலியூரே யாகும்.

1. இருப்பிடம் : இவ்வரும்பதி தென்னிந்திய இருப் புப் பாதையில் விழுப்புரம் – மாயூரத்திற்கு இடையிலுள்ள திருப்பாதிரிப்புலியூர் புகைவண்டி நிலையத்திற்கு மேற்கே அரைமைலில் உள்ளது.

2. தலவரலாறு : இவ்வரும்பதி பாதிரி விருக்ஷத் தைத் தல விருக்ஷமாக கொண்டமையாலும், வியாக்கிர பாதருஷி (புலி) பூஜித்தமையாலும் இவ்வரும்பதிக்குத் திருப் பாதிரிப்புலியூர் எனப் பெயர் வழங்கப்படுகிறது.

3. புலியூர்கள் : வியாக்கிரபாதரிஷி பூஜித்த தலங் கள் ஐந்து. 1. பெரும்பற்றப்புலியூர் (தென்புலியூர்) சிதம்பரம் ; 2. திருப்பாதிரிப்புலியூர் (வடபுலியூர்) ; 3. ஓமாம் புலியூர் ; 4. திருஎருக்கத்தம்புலியூர் (இது இரா ஜேந்திரப்பட்டணம் எனவும் வழங்கி வருகிறது) ; 5. பெரும்புலியூர்.

இவ்வைந்தில் இரண்டாவதாகக் கூறும் தலமே இத் திருப்பாதிரிப்புலியூராகும். இப்பதி நடு நாட்டுத் தலங்கள் 22-ல் 18வது தலமாக அமையப்பெற்றுள்ளது.

4. திருநாவுக்கரசரைக் கல்லிற்பூட்டிக் கடலிற் பாய்ச்சுதல் : சமணர்களுடைய துர்ப்போதனையால் அம ணர்கள் திருநாவுக்கரசு சுவாமிகளைக் கற்றூணிற் கட்டிக் கடலிற் றள்ளிவிட, அவர் கல்லினோ டென்னைப் பூட்டிக் கடலிற் பாய்ச்சினும் நல்ல துணையாவது நமச்சிவாயவே என்று உறுதியாய் மனத்துட்கொண்டு,

"சொற்றுணை வேதிய" னென்னுந் தூமொழி
நற்றமிழ் மாலையா "நமச்சி வாய "வென்

றற்றமுன் காக்குமஞ் செழுத்தை யன்பொடு
பற்றிய உணர்விஞற் பதிகம் பாடினுர்.''
(சேக்கிழார் சுவாமிகள் பெரியபுராணம் 1391வது செய்யுள்
(தேவாரம் - நமச்சிவாயத் திருப்பதிகம் - பண் - காந்தார பஞ்சமம்

'' சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே ''

என்னும் பத்துப் பாசுரங்களைப் பாடி முடித்ததும், கல்லே புணையாய் மிதக்க நாவுக்கரசர் திருப்பாதிரிப்புலியூரில் கரையேறி (திருநாவுக்கரசர் கரையேறிய இடம் இன்றும் கரையேற விட்டகுப்பம் என்று வழங்கிவருகிறது.) தமக்குத் தோன்ருத் துணையாயிருந்த இறைவனைப் பாதிரிப் புலியூர் ஆலயத்திற் கண்டு '' ஈன்ருளுமாயெனக் கெந்தையுமாய் '' என்னும் திருவிருத்தம் பாடி வணங்கிச் சில நாட் தங்கி எழுந்தருளியிருந்த பழம்பதி.

5. சிறப்புகள்: இங்கு உமாதேவியார் இவ்விறைவனைக் குறித்துத் தவஞ்செய்து அனுக்கிரகம் பெற்றத் தலம்; முடங்கிய காலொடு முயலாகச் சபிக்கப் பெற்ற முங்கண முனிவர் இத்தல இறைவனைப் பூஜித்துச் சாபம் நீங்கப் பெற்ருர்; இதனைத் திருஞானசம்பந்தர் திருப்பதிகத்து முதற்றிருப்பாட்டிற்

'' முன்ன நின்றமு டக்கால்மு யற்கருள் செய்துநீள்
புன்னை நின்றுகமழ் பாதி ரிப்புலி யூருளான்
றன்னை நின்றுவணங் குந்த னைத்தவ மில்லிகள்
பின்னை நின்றபிணி யாக்கை யைப்பெறு வார்களே.

எனக் குறிப்பிட்டுள்ளார்.

6. ஆலய அமைப்பு: இவ்வாலயம் கிழக்குப் பார்த்த சந்நிதானம். சுவாமி கோயிலுக்கு வடபால் தேவியார் சந்நிதானம் தனியாக அமைந்துள்ளது. இவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ள மூல சிவலிங்கப்பெருமான் (தோன்ருத் துணைநாதர்) அருளொழுகும் திருமேனியுடன் காட்சியளிக்கிருர்.

7. பாடல்கள்: இவ் வாலயத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானைப் (தோன்றாத் துணைநாதரைப்) புகழ்ந்து திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளும், திருநாவுக்கரசு சுவாமிகளும் புகழ்ந்து பாடியுள்ளார்கள். திருஞானசம்பந்தர் தேவாரத்தில் " புன்னைநின்று கமழ் பாதிரிப் புலியூருளான் " எனவும் திருநாவுக்கரசு சுவாமிகள் திருவிருத்தத்தில் " என்றான் இமையவர்க் கன்பன் திருப்பாதிரிப்புலியூருளான் ", எனவும் " தேயமெல்லாம் நின்றிறைஞ்சுந் திருப்பாதிரிப்புலியூருளான் எனவும் புகழ்ந்து பாடியுள்ளார்கள்.

8. தலபுராணம்: இத் தலத்திற்கு இலக்கணம் சிதம்பரநாத முனிவர் இயற்றிய தலபுராணமும், தொல்காப்பிய முனிவர் இயற்றிய கலம்பகமும் அச்சிடப்பட்டுள்ளன. இங்கு ஞானியார் சுவாமிகளின் மடம் ஒன்று இருக்கிறது.

9. ஆலய ஆட்சி: இவ்வாலயம் சென்னை இந்து மத அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தினரால் ஏற்படுத்தப் பட்டிருக்கும் தர்மகர்த்தர்களால் நன்கு பரிபாலிக்கப்பட்டு வருகிறது.

10. தீர்த்தம்: இவ்வாலய சந்நிதானத்துக்கு வடபால் சிவகர தீர்த்தம் என்ற திருக்குளம் ஒன்றுளது. இவ்வாலயத்திற்கு வடபால் கெடிலநதி தீர்த்தமும் ஓடுகிறது.

11. தலவிருட்சம்: இவ்வாலய வடக்கு உட்பிரகாரத்தில் தலவிருட்சமாகிய பாதிரி விருட்சம் பட்டுப்போய் மொட்டையாகக் காணப்படுகிறது. அப் பட்டுப்போன தல மரமும் சிதைவுருவண்ணம் அதற்குப் பித்தளைக் கவசமிட்டு மிக பந்தோபஸ்தாக வைக்கப்பட்டிருக்கிறது.

12. நாமங்கள்: சுவாமி – தோன்றாத்துணைநாதர்; பாடலிவநேசுவரர்; தேவியார் – பெரியநாயகி யம்மை; தோகை நாயகி; தல விருக்ஷம் – பாதிரி; தீர்த்தம் – கெடில நதி, சிவகர தீர்த்தம்; இதற்கு சம்பந்தர் பதிகம் – 1; நாவுக்கரசர் பதிகம் – 1.

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி யென்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டுமிவ் வையகத்தே

தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய் பாதிரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை மேல்வைத்த தீவண்ணனே.

திருத்தர் அமணர்தந் தீநெறிப் பட்டுத் திகைத்துழுத்தி
தருந்தா ளிணைக்கே சரணம் புகுந்தேன் வரையெடுத்த
பொருந்தா அரக்கன் உடல்நெரித் தாய்பா திரிப்புலியூர்
இருந்தாய் அடியேன் இனிப்பிற வாமல்வந் தேன்றுகொள்ளே.

திருச்சிற்றம்பலம்

---

4. சாத்திரப் பகுதி

சிவப்பிரகாசம் மூலமும் உரையும்

(தருமையாதீனப்புலவர் - முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்,
தமிழ்ப் பேராசிரியர், ஓரியண்டல் காலேஜ், தருமபுரம்)

]மலர் - 26 ; இதழ் - 3 ; 124-ம் பக்கத்தொடர்ச்சி]

சு. புநிதன் நாமம்

பந்தமா னவைய றுத்தும் பௌதிகம் உழலும் எல்லைச்
சந்தியா தொழியா திங்குத் தன்மைபோல் வினையுஞ் சாரும்
அந்தமா திகளி லாத அஞ்செழுத் தருளி னாலே
வந்தவா றுரைசெய் வாரை வாதியா பேதி யாவே. சுo

என்பது. மேற்கூறிய மூவகையாலும் (வினை முதலிய) மும் மலபந்தத்தைத் தீர்த்தும், பூதசம்பந்தமான தேகமும் கரணமும் சஞ்சரிக்கும் (குயவனது திரிகையானது வனைகலம் வனைந்து கைவிட்டாலும் விடாது சுழலு மாறுபோல வாதனையாலே முன்பு போல வியாபரிக்கும்) அளவும், பெருங்காயம் வைத்தெடுத்த பாத்திரம் வாதனை நீங்காத வாறு போல பிராரத்தவினையும் ஆகாமிய வினையும் சாரா தொழியா. அவை சாரா தொழிதற்பொருட்டு, அழிவும் தோற்றமும் இல்லாத நித்தியம் (அக்ஷரம்) ஆகிய திருவைந் தெழுத்தைக் குருவருளுபதேசத்தால் எய்தியவாறு உச்சரிப் பவரை அவை வாதித்தலும் ஞான நிட்டையினின்றும் பேதித்தலும் செய்யமாட்டா என்பதாம்.

பந்தமானவை – பிராரத்தகன்மம். வினை – ஆகாமிய கன்மம். வாதியாமை பேதியாமை இரண்டும் அவ்விரு வகை வினைக்கும் முறையே உரியன என்பது மதுரைச் சிவப்பிரகாசருரை. 'உடலூறு நுக்கவும் உற்றிடும் வினையும் இடர்பட அஞ்செழுத்தியம் புக' என்றதறிக. இத்திரு விருத்தம் திருவைந்தெழுத்தின் பயனை உணர்த்திற்று, இதை அறியாமையால், 'சிவசிவ என்கிலர் தீவினையாளர்.' தற்போதம் முளையாதவாறு ஞான நிலையில் உறைத்து நிற்றற்கு இன்றியமையாது வேண்டப்படுவது இத்திருவைந் தெழுத்துச் சாரணம். இது அநாதிநித்தியாக்ஷரம் ஆதலின் 'அந்தமாதிகளிலாத அஞ்செழுத்து என்றருளினர். நற்றுணை யாவது நமச்சிவாயவே' என்னும் துணை அறியுமோ ?

'உற்ற குறியழியும் ஓதுங்கால் பாடைகளில்
சற்றும் பொருள்தான் சலியாது.' (உண்மை விளக்கம்–40)

திருவெழுத் தஞ்சில் ஆன்மாத் திரோதம்ஆ சருள்சி வம்சூழ்
தரநடு நின்ற தோன்றுந் தன்மையும் தோன்மை யாகி
வருமல மிகுதி யாலே வாசியில் ஆசை இன்றிக்
கருவழிச் சுழலும் மாறுங் காதலார்க் கோத லாமே. ௯௪

என்பது, திருவைந்தெழுத்தில் ஆன்மாவை யுணர்த்தும் யகாரம், திரோதான சத்தியை உணர்த்தும் நகாரமும் ஆணவத்தை யுணர்த்தும் மகாரமும் ஆகிய இரண்டுங் கூடி ஒருபாலும், திருவருளையுணர்த்தும் வகாரமும்சிவத்தை யுணர்த்தும் சிகாரமும் ஆகிய இரண்டும் இயைந்து மற் றொரு பாலும் சூழ்ந்து நிற்க நடுவாய் நின்றது. இவ்வாறு ஆன்மா ஒருபால் ஊன நடனமும் ஒருபால் ஞான நடன மும் நிகழத், தான் நடுவே நின்று சார்ந்ததன் வண்ணமாதல் தொல்லியல்பாகிவரும். வரினும் ஊன நடனத்தின் மிகுதி யால் ஞான நடனத்தில் விருப்பின்றிப் பிறவிவழிச் செல் லும், ஊனநடனத்திற் கொண்ட விருப்பு மாறி ஞான நடனத்திற் காதல் கொள்ளும் பக்குவர்க்கு இத்திருவைந் தெழுத்து உபதேசிக்கலாம் என்பதாம்.

ஆசு என்பது ஆணவத்தைக் குறிக்கும் பெயர் என் பதைத். தனியே முன்னும் எழுதியுள்ளேன். ஆண்டுக்

காண்க. இது திருவைந்தெழுத்தின் பொருளும் நிலையும் அதற்குரிய பக்குவமும் உணர்த்தினமை காண்க.

ஆசுறு திரோதம் மேவா தகலுமா சிவம்முன் னாக
ஓசைகோள் அதனில் நம்மேல் ஒழித்தருள் ஓங்கும் மீள
வாசியை அருளுமா ய மற்றது பற்று உற்றங்
கீசனில் ஏகம் ஆகும் இதுதிரு வெழுத்தின் ஈடே. கூஉ

என்பது. ஆணவமும் அதனால் உற்ற திரோதமும் அடையாமல் அகலுமாறு, சிகாரமும் வகாரமும் முன்னாக நிற்கத் திருவைந் தெழுத்தை யுச்சரித்தல் செய்க. அவ்வாறுச்சரித்து வருவதில் நகாரமாகிய திரோதம் அதன் வழித்தான மகாரமாகிய மலத்தை ஒழித்து, வகாரமாகிய அருளாகி ஓங்கும் யகாரம் மலத்தின் நீங்கி மீளும். மீளவே, வகாரமாகிய திருவருள் சிகாரமாகிய சிவத்தை அருளுமாறு, அவ் வகாரத்தையே பற்றாக வுற்று, அந்நிலையில் சிகாரத்தொடு அத்துவிதமாகும். இது பஞ்சாக்கரத்தியல்பு என்பதாம். இதன் பொருள் உபதேசத்தால் அனுபவித்துணர்தற்பாலது. 'வஞ்சனையால் அஞ்செழுத்தும் வழுத்துவார்க்குச் சேயான் என்று திருவீழிமிழலையில் அப்பர் அருளியதால், சிவபிரான் அணியானும்வண்ணம் விதிப்படி மெய்யன்புடன் ஓதுதலும் அதற்குரிய நெறியில் நின்றொழுகுதலும் வீடு பெற விரும்புவார் கடனாகும். வீடுபேற்றிற்கு,

'வரையார் மடமங்கை பங்கா கங்கை
மணவாளா வார்சடையாய் நின்றன் நாமம்
உரையா உயிர்போகப் பெறுவேன் ஆகில்
உறுநோய்வந் தெத்தனையும் உற்றால் என்னே'

என்று, கவலையற்றிருக்கும் தலையாய மெய்ந்நெறி இதுவேயாகும். ஆதலின், "நின் நாமம் பரவி நமச்சிவாய என்னும் அஞ்செழுத்தும் சாம் அன்று உரைக்கத்தகுதி கண்டாய் எங்கள் சங்கரனே" என வேண்டிப் பெற்று, அவனை நினைந்தே ஆவி உடம்பினின்றும் கழியப்பெறுதல் வேண்டும். பேரின்பம் பயத்தல் பற்றி,

"ஆலைப் படுகரும்பின் சாறு போல
அண்ணிக்கும் அஞ்செழுத் தினு மத்தான்

என்றருளினர். இத் ‘ திருநாமம் அஞ்செழுத்துஞ் செப் பாராகில்...பெருநோய்கள் மிக நலியப் பெயர்த்துஞ் செத்துப்பிறப்பதற்கே தொழிலாகிஇறக்கின்றூரே.’! அதனை ‘ நாவின் நூறு நூருயிரம் ’ ஜபிக்கவேண்டும். ஜபிக்கின்ற முறை அவரவர் நிற்கும் பக்குவத்திற் கேற்ப வேறுபடும். நிற்கும் முறையும் ஓது முறையும் வேறுபடலாகாது.

‘ அதனை எவ்வெவர்கோட் படுபொருளும் அஞ்செழுத்தின்
அடக்கி அவற்றியல்பு காட்டி மெய்வகைஅஞ்
சவத்தையினும் நிற்குமுறை ஓதுமுறை விளங்கத்
தேற்றி அவ்வெழுத்தின் உள்ளீடும் அறிவித்துச்
சிவபோகத் தழுத்தி நாயேன் செய்வினையுங்
கைக்கொண்ட வேலப்ப தேசிகன்றூள் சென்னிவைப்பாம்.’

என்று நம் ஆசிரியப் பெருந்தகையின் குருவணக்கத்தால் அறிக.

‘ அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் - நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்தினையும் பேசா எழுத்தினையும்
கூசாமற் கூறக் கொடி ’

என்று கொடிப்பாட்டில் உணர்த்தப் பெற்ற பஞ்சாக்கர பேதங்களை உணர்க. திருமுறைகளினும் பின் வருமாறு காணப்படுகின்றன.

1. ‘ நக்கர்தம் நாமம் நமசிவாய என்பர் நல்லர் ’

(திருமுறை ௩. திருப்பதிகம். 2671–6)

‘ எந்தையார் திருநாமம் நமச்சிவாய என்றெழுவார்க்கு
இருவிசும்பில் இருக்கல் ஆம் ’ (6. 307. 10)

2. ‘ சிவாயநம என்னுஞ் சிந்தைச் சுருதி ’ (6. 275. 8)

‘ நானேயோ தவஞ் செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன் ’

(திருவாசகம்)

3. ‘ நண்பாற் சிவாயஎனு நாலூர் மயானத்தே
இன்பா யிருந்தானை ஏத்துவார்க் கின்பமே ’ (2. 180. 10)

‘ விண்ணினர் பணிந்தேத்த வியப்புறும்
மண்ணினர் மறவாது சிவாயஎன்
றெண்ணினர்க் கிடமா எழில் வானகம் (வீடு)
பண்ணினர் அவர் பாலைத் துறையரே ’ (5- 165. 6)

4. ‘ வசிவலவனதிடம்...கழுமல வளநகரே ’ (1. 126. 2)

‘ வசியாற்ற மாமதியும் ஆம் ’ (3. 306. 2)

‘ வசிபேசும் அரனர் மகிழ்விடம் ’ (3. 335. 2)

‘ கலந்தருள் பெற்றது மாவசியே
காழியரனடி மாவசியே ’ (3. 371. 10)

5. ‘ பேரெழுத் தொன்றுடையான் ’ (6. 305. 6)

‘ பேதம் அறும் அருள்கடந்த பேரெழுத்து ’
(தணிகைப் புராணம். 602)

இவற்றுள் ஏதேனுஞ் சொல்லவல்லார் வீடு பெறுதல் திண்ணம். “அஞ்செழுத்தாகிய மந்திரந்தன்னில் ஒன்று வல்லாரையும் சாரல்” என்று காலதைப் பணித்தருளிய தாலறிக. ‘அஞ்செழுத்தும் வாய் நவிலவல்லோர்க்கு என்றும் சிறந்தானைத் திருநாகேச்சரத்துளானை, ‘நமச்சிவாயஞ் சொல்ல வல்லோம் நாவால்’ என்றவற்றால் விளங்கும் வன்மையும், அவ்வன்மையின் பயனாக நாம் மறந்தாலும் நம் நாவே இடைவிடாது சொல்லுந் திறமுடைத்தாயிற்று என்பதை விளக்கும். ‘நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே’ என்னுந் திருப்பாட்டடியும் அறிதற் குரியன.

‘ஆதியீறில்லா ஐந்தெழுத்து’ ‘குருமணியின் ஒளிப் பிழம்பு’ ‘பூதமுதற் கரணமெலாம்’ ‘பாதமுகமுடிக்குதவு பாத்திய மாதிகளெல்லாம்’ என்னும் தொடக்கங்களை யுடைய தணிகைப் புராணச் செய்யுட்களை இங்குணர்தல் நன்று.

எ. அணைந்தோர் தன்மை

தீங்குறு மாயை சேரா வகைவினை திரிவி தத்தான்
நீங்கிட நீங்கா மூல நிறையிருள் இரிய நேயத்

தோங்குணர் வகத் தடங்கி உளத்தில்இன் போடுங்க நேரே
தூங்குவர் தாங்கி ஏகத் தோன்மையின் துகளி லோரே. கூகூ

என்பது. யான் எனதென்னும் தீய செருக்கு உறுதற்கு வழியாகிய மாயையும் மாயாகருவிகளும் சேராதவாறு கன்மமலம் முற்கூறிய மூவகையால் நீங்கிய பின்னரும் நீங்காத மூலமலமாகிய பூரணாந்தகாரம் (ஆணவம்) ஓடற்பொருட்டு, அன்பினில் ஓங்கிய திருவருளாகிய சிவஞானத்தினிடத்தில் அடங்கி, ஆன்மாவின்கண் சிவமாகிய பேரின்பம் ஒடுங்கும் வண்ணம் தடையறத் தாமற்று நிற்பர்; அன்பொன்றே தாங்கி அத்துவிதமாகிய அநாதி சம்பந்தத்தில், எவர் எனில், துகள் இல்லாதவர்கள் என்பதாம்.

மாயை இல்லையேல் எனது என்னுஞ்செருக்குற வழி இல்லை. அதுபற்றி, யான் எனதும் இன்ரும். திரிவிதம் என்பதற்குப் பிறர் வெவ்வேறுரைத்தனர். மதுரைச்சிவப்பிரகாசர் 'தன்னை, வினையைத் தலைவனை அறிகிற ஞானத்தினலே' என்றும், தியாநம் தோத்திரம் சிவகைங்கரியம் என்னும் மூன்ருலும் வினை நீங்கும் என்றும், தீக்ஷை, அநுபவம், ஞானம் என்றும் அறிவித்தருளினர். இலக்கணம் சிதம்பரநாத முனிவர் கேட்டல் சிந்தித்தல் தெளிதல்களால் வினை நீங்கும் என்ருர். ஆசாரியன் ஞானசத்தியால் ஆகாமியமும், கிரியாசத்தியால் சஞ்சிதமும், சுவாநுபவத்தால் பிராரப்தமும் நீங்கும் எனலே தக்கது. இது முன் மூன்றனுள் ஒன்று எனலாம்.

குறிப்பிடம் காலம் திக்காசனம் கோள்கை குலம்கு ணம்சீர்
சிறப்புறு விரதம் சீலம் தவம்செபம் தியானம் எல்லாம்
மறுத்தற வொழிதல் செய்தல் மருவிடா மன்னு செய்தி
உறக்குறுபவர்போல்வாய்மையொழிந்தவைஒழிந்துபோமே.

என்பது. குறிப்பிடம் முதலியவற்றை யெல்லாம் நமக்கு வேண்டா என்று மறுத்து அறவொழிதலும் வேண்டும் என்று மருது செய்தலும் பொருந்தா. நிலைத்த அக்கிரியை தூங்கினவர் (கைப்பாக்குப்) போல் ஒழிந்துபோம். உண்மை ஞானம் ஒன்றே ஒழியாது நிற்கும் என்பதாம்.

CONN... 18 JUL 1956 MADRAS

5. கவிப்பகுதி

காமம்சான்ற ஞானப்பனுவல்*

(புலவர் - முருகவேள், B.O.L.)

தொடர் அமைந்துள்ள இடம்

'காமம் சான்ற ஞானப் பனுவல்' என்னும் இத் தொடர், குமரகுருபர அடிகள் அருளிச்செய்த சிதம்பர மும்மணிக்கோவையுள்.

“ கடங்கலுழ் கலுழிக் களிநல் யானை
மடங்கலந் துப்பின் மானவேல் வழுதிக்கு
இருநிலம் அகழ்ந்தும் எண்ணில்பல் காலம்
ஒருவன் காணாது ஒளித்திருந் தோயை
வனசப் புத்தேள் மணிநாப் பந்திக்
கவனவாம் புரவியிற் காட்டிக் கொடுத்துப்
பைந்தமிழ் நவின்ற செந்நாப் புலவன்
ஐந்திணை யுறுப்பின் நாற்பொருள் பயக்கும்
காமம் சான்ற ஞானப் பனுவற்குப்
பொருள்எனச் சுட்டிய ஒருபெரும் செல்வ !”

எனவரும் பாடற்கண் வருவதாகும். அதன்கண் குமர குருபரர், மாணிக்கவாசகர் தாம் அருளிச்செய்த திருவாசகம் திருச்சிற்றம்பலக்கோவையார் என்னும் இருபெரு நூற்கும் உண்மைப் பொருளாவார் அம்பலவாணரே எனச் சுட்டிச் சென்றமையினையும், பாண்டிய வேந்தனுக்கு மாலும் அயனுமே காண மாட்டாத இறைவனை வேதப் புரவியில் வாதுவனாகப் போதாக் காட்டி அவனை உய்வித்த சிறப்பினையும் புகழ்ந்தெடுத்துப் பாராட்டி, மாணிக்கவாசகரைச் 'செந்நாப் புலவன்' எனச் சிறப்பித்தும், திருவாசகத்தினைப்

---

*நமது சமாஜத்தின் சார்பில் 27-12-52 அன்று சென்னை பூக்கடை மல்லீஸ்வரர் திருக்கோயிலில் நடைபெற்ற மாதாந்தரக் கூட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவை, சமாஜத்துணைச் செயலாளர் வேண்டுகோட்படி திருக்கோவையாரைப் பயில விழைவார்க்குப் பயன்படுமாறு விரித்தும் தொகுத்தும் எழுதியது.

'பைந்தமிழ்' எனப் போற்றியும், திருச்சிற்றம்பலக்கோவை யாரை 'ஐந்திணை யுறுப்பின் நாற்பொருள் பயக்கும் காமம் சான்ற ஞானப் பனுவல்' என விதந்து கூறியும் மகிழ்ந் தின்புறுகின்றார்.

தொடர் அமைப்பின் சிறப்பு

திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் நூலானது, 'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும், பாடல் சான்ற புலனெறி வழக்கம்' தழீஇக், குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என்னும் ஐந்திணைக்கும் உரிய முதல் கரு உரிப்பொருள்கள் யாவும் அமைய இயற்றப்பட்டதாகலான் 'ஐந்திணை யுறுப்பின்' என்றும்; தன்னை ஓதுவார்க்கு இன்பம் தலைக்கீடாக அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான் கினையும் ஒருசேரப் பயப்பித்தலின் 'நாற்பொருள்பயக்கும்' என்றும்; எத்திறத்தானும் உய்திநெறி தலைப்படாத கடையாய மக்களையும் கடைத்தேற்றிப் 'பேதையைக் காதல் காட்டிக் கைவிடுக்க' என்னும் முறைபற்றி, பல பிறப்பிடையும் ஆணும் பெண்ணுமாய்ப் பயின்று போகந் துய்த்துப் போந்த அவர்தமக்கு, அவர்கள் தாழப்பெறும் இணைவிழைச்சினுள்ளே மிக்கதொன்று காட்டிக் 'கடுத் தின்னு தானைக் கட்டிபூசிக் கடுத்தீற்றியவாறு போல', உய்திநெறி எய்துவித்தற் பொருட்டு, ஒப்புயர்வற்ற கர்தற் றலைமக்கள் இருவர்மேல் வைத்து, அவர்தம் காதலின்ப அன்பு வாழ்க்கையின் வளர்ச்சித் திறனைப் பலபடியாகத் தொடர் கதைபோல் அமைத்துக் காமச் சுவைகனிய இயற் றப்பெற்றுண்மை கருதிக் 'காமம் சான்ற' என்றும், அங்ஙனம் காமம் சான்ற இயல்பினது போல மேனோக் காகக் காண்போர்க்குத் தோன்றினும், அதனை ஊடுருவிக் காணவல்ல நுண்மாண் நுழைபுலம் மிக்க அறிவு மதுகை வாய்க்கப் பெற்றோர்க்கு, குறிஞ்சி பாலை முல்லை மருதம் நெய்தல் என்னும் ஐந்திணையும் முறையே சாக்கிரம் சொப் பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் (விழிப்பு கனவு உறக் கம் உயிர்ப்பக்கம் பேருறக்கம்) என்னும் ஐவகை உயிர்நிலை களைக் குறிக்கும் எனவும், சிவனும் உயிரும் முறையே தலைவியும் தலைவனுமாம் எனவும், பாங்கன் பாங்கி செவிலி நற்றாய் என்போர் முறையே திருவருளும் உயிரறிவும்

மறைப்பாற்றலும் இறைவியுமாம் எனவும் இனிதுணர்ந்து கொள்ளுதற்கு இயைந்து விளங்கும் நலங் குறித்து "ஞானப் பனுவல்" என்றும்; குமரகுருபர அடிகள் இதனை அழ குறப் பாராட்டி மகிழ்ந்தனர்! இந்நூல் தூய காமச் சுவை யோடு ஞானப் பொருளும் பொதிந்துள்ளமையினை,

"தில்லை மூதூர்ப் பொதுவினில் தோன்றி
எல்லையில் ஆனந்த நடம்புரி கின்ற
பரம காரணன் திருவரு ளதனால்
திருவாத வூர்மகிழ் செழுமறை முனிவர்
ஐம்பொறி கைஇகந்து அறிவாய் அறியாச்
செம்புலச் செல்வ ராயினர் ஆதலின்
அறிவன்நூற் பொருளும் உலகநூல் வழக்குமென
இருபொருளும் நுதலி எடுத்துக் கொண்டனர்;
ஆங்கவ் விரண்டனுள்,
ஆகமநூல் வழியின் நுதலிய ஞான
யோகநுண் பொருளினை யுணர்த்துதற் கரிது..."

எனவரும் பேராசிரியர் உரைப்பாயிரம் தானும் வலியுறுத்தும். 'திருக்கோவையாருண்மை' என்னும் பெயரால் வழங்கும் அரும்பெறல் நூல், இதன் ஞானப் பொருளினை நன்கினிது விரித்து விளக்குவதாகும்.

திருக்கோவையாரின் பெருமை

இத் திருச்சிற்றம்பலக் கோவையாரினைக் குமரகுருபர அடிகளார் ஒருவர் மட்டுமே யன்றி, 'இலக்கணக் கொத் துரை' இயற்றிய சுவாமிநாத தேசிகரும்,

"பல்காற் பழகினும் தெரியா உளவேல்
தொல்காப் பியம்திரு வள்ளுவர் கோவையார்
மூன்றினும் முழங்கும்"

எனச் சிறந்தெடுத் துரைத்தனர்! தமிழ் மொழியின் வேத வியாதர் எனத் தகுந்த நம்பியாண்டார் நம்பிகளும், 'வாதவூரர் அருளிய திருச்சிற்றம்பலக் கோவையைக் கண்ட பின்னரும் அதன் பொருளைத் தெளியாத பிற புலவர்கள் கவிபாடி நமக்குச் சிரிப்பூட்டுகின்றனர்' என இதன் பெருமையினை வியந்து கூறுவர். "ஆரணங்காண் என்பர் அந்தணர்..."

என வரும் பழைய சிறப்புப்பாயிரப் பாடலும் திருக்கோவையின் பலதிறச் சிறப்புக்களை விளக்கும். 'கல்லாடம் பயின்றாருடன் சொல்லாடற்க' எனத் தமிழறிஞர் பாராட்டும் நல்லதொர் அரும்பெறல் நூல், இத் திருக்கோவையாரின் சிறப்பினை விளக்குதற் கெனவே எழுந்ததாகும். பேராசிரியர் தமிழ்க்கடல் சிவத்திரு. மறைமலை அடிகளார், தமிழ்மொழிக்கண் உள்ள ஒப்புயர்வற்ற தெய்வப் பெற்றிமை, தொல்காப்பியம் திருக்குறள் போன்ற தலைசிறந்த நூற்களுள் ஒன்றாகச் சேர்த்துத் தம் உயிரினும் இனிய விழுமிய நூலாகத் திருக்கோவையாரைப் போற்றிவந்தனர். அவர் தமக்குத் திருக்கோவையாரின்கண் அளப்பரிய பேரீடுபாட்டினை, அவர்கள் இயற்றிய பட்டினப் பாலை ஆராய்ச்சியுரையுள், 'ஆவா இருவர் அறியா அடி தில்லை அம்பலத்து' எனத் தொடங்கும் திருக்கோவையார் "நடுங்க நாட்ட"த் துறைச் செய்யுளுக்கு அவர்கள் செய்துள்ள விரிவுரையால் அறிந்துகொள்ளலாம். அம்மட்டோ! பிற்காலத்தெழுந்த எண்ணிறந்த பலகோவை நூல்கட்கெல்லாம் அடிப்படை எடுத்துக் காட்டு நூலாக அமைந்ததும் இத் திருக்கோவையாரேயாம் எனின், இவ்வரும் பெறல் நூலின் பலபெருஞ் சிறப்புக்களையும் எம் ஒரு நாவாற் கூறல் ஒல்லுமோ?

புதுமையும் புரட்சியும்

தமிழிலக்கியங்களின் வரிசையிலும் வரலாற்றிலும், திருவாசகம் திருக்கோவையார் என்னும் இரண்டும் ஒரு பெருஞ் சிறப்பு முதலிடம் பெறுவனவாகும். இவ்விரண்டும் சங்க நூல்களுக்கும் பிற்கால இலக்கியங்கட்கு மிடையே ஓரெல்லைக்கல் போல விளங்கும் இயல்பின. பிற்காலக் கவிதைகள் பலவும் தோன்றுவதற்கு வழி வகுத்துக் காட்டிய கழிபெருஞ் சிறப்பினவாய், முற்காலச் சங்கத் தொகை நூல்களினின்றும் ஓரளவு வேறுபட்ட பொருளும் போக்கும் நடையும் அமைப்பும் உடையனவாய் இவ் விரண்டும் இலங்குகின்றன. தொல்காப்பியனார் கூறாத கட்டளைக் கலித்துறை, பலவகை விருத்தங்கள் என்னும் புதிய பாவினங்களை முதன் முதற் பெருக வழங்கப் பாடியருளியவர் மாணிக்கவாசகரேயாவர். பிற்காலத் தெழுந்த கோவை நூல்களெல்லாம் கட்டளைக் கலித்துறைகளா

லேயே அமைய நேர்ந்தமைக்குக் காரணம் திருக்கோவை யாரின் அமைப்பேயாம். சிந்தாமணி பெரியபுராணம் கம்பராமாயணம் முதலிய நூல்களும் பிறவுமெல்லாம் பெரிதும் விருத்தப்பாக்களாலேயே இயற்றப்படுதற்குத் திருவாசகமே வழிகோலிக் கொடுத்தது எனலாம். எனவே, மாணிக்கவாசகர் மொழி இலக்கியம் கவிதை முதலிய துறைகளில் ஒருவகைப் புதுமையையும் புரட்சியையும் விளைவித்த சான்றோராதல் தெளியலாம்.

அதுமட்டுமோ! சங்ககாலப் புலவர்கள் இயற்கைக் காட்சியழகுகளைக் கலையுணர்வுக்கண் மட்டுமே கொண்டு கண்டு மகிழ்ந்து, நம்மனோர்க்கு அவற்றைத் தம் கவிதைகளில் அழியா ஓவியமாக அழகுறத் தீட்டிக் காட்டினர். மற்று, நம் மாணிக்கவாசகரோ வெறும் கலையுணர்வோடு மட்டுமன்றி, இறையருளுணர்வுக் கண்கொண்டு அவற்றைக் கண்டு நம்மனோர்க்கு அவ்விறையருளுணர்வைத் தோற்றுவிக்கத் தம் இறையருளின்ப அனுபவ நலங்களைக் கவிதை மழையாகப் பொழிந்தார். சங்ககாலப் புலவர்கள் இவ்வுலகிற் காட்சி நிகழ்ச்சிகளையும், இவ்வுலகின்கண் வாழும் மாந்தர்தம் உள்ளத் துணர்ச்சிகளையுமே குறித்துப் பாடிச் சென்றனர். ஆயின், மாணிக்கவாசகரோ இவ்வெல்லாவற்றிற்கும் அடிப்படைப் பெருங்காரணமாக இலங்கும் இறைவனது திருவருட்டிறத்தினைக் குறித்துப் பலபடியாக விரித்துப் பாடி விளக்கியுள்ளனர். நமக்குத் தெரிந்த வரையில் முதன் முதல் தமது இறையருளின்ப அனுபவ நலத்தின் பெற்றியினைத் தாம் நுகர்ந்தவாறே தம் திருவாய்மலர்ந்து, கவிதைகளாகப் பாடி விளக்கிய சான்றோர் மாணிக்கவாசகரே எனலாம். தொல்காப்பியர் திருவள்ளுவர் நக்கீரரை யுள்ளிட்ட சான்றோர்கள் எவரும் இறையருளின்ப அனுபவம் குறித்துத் தம்மாட்டு நிகழ்ந்த அனுபவச் செய்திகளாக ஏதும் பாடிற்றிலாமை ஈண்டுக் கருதி யுணரற்பாலது. எனவே, இத்துறையிலும் ஒரு புது நெறியை வகுத்தமைத்து வளர்த்தவர் மாணிக்கவாசகரேயாதல் தேற்றம். சங்ககாலச் 'செந்தமிழ்' மொழியினைத் 'தெய்வச் செந்தமிழ்' மொழியாக மிக்குயர்ந்து மிளிருமாறு முதன்முதற் செய்த சிறப்பு மாணிக்கவாசகர்க்கே உரியது. இவ்வாற்றால், மாணிக்கவாசகர் சங்ககாலத்தை யடுத்துத் தோன்றி முதன்முதலாக

ஒருபெரும் புதுமையினையும் புரட்சியினையும் தமிழகத்தில் நிகழ்த்துவித்தவர் என்பது உணர்ந்துகொள்க!

காதலுணர்ச்சியும் கடவுளுணர்ச்சியும்

மாணிக்கவாசகர் நிகழ்த்திய பல அரும்பெரும் நற்செயல்களுள் ஒன்றை ஈண்டுக் குறிப்பிடுதல் பொருத்தமாகும். சங்ககாலத்தை அடுத்துத் தோன்றிய மாணிக்கவாசகர், தம் காலத்தில் சங்ககாலத் தமிழர் நாகரிக வாழ்க்கை சிறிது சிறிதாகத் தேய்ந்து மங்கி மறையத் தொடங்கினமை கண்டு, அதற்கு உறுபெருங் காரணம் யாதென ஆராய்ந்து, சங்ககாலத் தூய விழுமிய காதலொழுக்கம் பின்னர் நாளடைவில் தூய்மை இழந்து இழிதகவுற்றுப் 'பொய்யும் வழுவும்' மிக்குச் சீர்கேடுற்றொழிந்தமையே அதற்குக் காரணமென உணர்ந்து, மீண்டும் பழந்தமிழ்ச் சான்றோர்களின் நாகரிக வாழ்க்கைப் பண்பாட்டினை வளர்த்து நிறுவுதல் தம் கடமை எனத் தேர்ந்து, அங்ஙனம் செய்தல் வேண்டிற் பழைய சங்கச் சான்றோர் பாராட்டிய தூயவிழுமிய காதலுணர்ச்சியோடு கடவுளுணர்ச்சியினையும் புகுத்திப் புணர்த்திப் பரப்புதலே தக்கதொரு நெறியாம் எனத் துணிந்து, காதலுணர்ச்சியோடு கடவுளுணர்ச்சியினையும் இணைத்துப் பிணைத்துத், 'திருச்சிற்றம்பலக் கோவையார்' என்னும் இந்நூலைச் செய்தனர்! எத்துணைதான் தூய விழுமிய காதலொழுக்கமாயினும் அது கடவுளுணர்ச்சியொடு கூடாதாயின், அது நாளடைவில் மக்களிடையே படிப்படியே இழிந்து, ஒருநாடும் மொழியும் மக்களும் நாகரிகமும் அழிந்தொழிவதற்குக் காரணமாதல் ஒருதலை. மிகப்பழைய கிரேக்க உரோம நாகரிகங்களெல்லாம் அடியோடு மாய்ந்து மறைந்து 'மருங்கறக் கெட்டு' அழிந்தொழிந்தமை, அம்மக்கள் வளம் நிறைந்த செல்வச் செழிப்பிலும் வரம்பிகந்த காமக்களியாட்டிலும் மயங்கிக் கடவுளுணர்ச்சியினை மறந்ததன் விளைவேயாம் என்பர் அறிஞர். ஆதலின், அவ்வரும் பேருண்மையினை ஆய்ந்துணர்ந்து, அக் குறைபாட்டினைப் போக்கி நிறைவு செய்தல் குறித்துத் தம் மதியிலச்சினையாகத் திருக்கோவையாரினையாத்த ஆளுடைய அடிகள் செய்த பிறிதொரு செயலும் ஈண்டறிந்து மகிழற்பாலது!

'கோவை' என்னும் பெயர்க் காரணம்

சங்ககாலப் புலவர் பெருமக்கள் விடுபூக்களைப் போலத் தனித்தனியாக ஓரொரு துறைபற்றியே அகத்திணைப் பாடல்கள் பாடிச் சென்றனர். தொல்காப்பியரும் தலைவன் கூற்று, தலைவிகூற்று, பாங்கன்கூற்று, பாங்கிகூற்று என்றிங்ஙனம் அவரவர் கூற்று நிகழ்தற்குரிய இடங்களையும் பிறவற்றையும் கூறினரேயன்றி, இயற்கைப் புணர்ச்சி இடந்தலைப்பாடு பாங்கற்கூட்டம் பாங்கியிற் கூட்டம் முதலானவற்றையும் காட்சி ஐயம் தெளிதல் நயப்பு முதலிய துறைகளையும் நிரல்பட வகுத்துக் கூறிற்றிலர். திருவள்ளுவர் தம் நூலுட் காமத்துப் பாலில் ஒரு தொடர்பு பட அவை தம்மைச் சிறிது வகுத்துரைத்தனர்! ஆசிரியர் நக்கீரனார் தமது களவியலுரையில் அதற்கு மேலும் சிறிது விளக்கம் தந்தார். என்றாலும், இஞ்ஞான்று வழங்கும் கோவை நூற்களிற் காணப்பெறும் நானூறு துறைகளையும் முதன் முதல் வரிசைப்படுத்தி ஒழுங்கு செய்து கோவை செய்து திருத்தமுறத் தந்தவர் மாணிக்கவாசகரே என்பது அறிதற்குரியது. அப்பெருஞ் சிறப்பினைக் கருதியே 'கோவையார்' என்னும் சொல் வேறுபிற எந்தக் கோவை நூலினையும் குறியாமல் மாணிக்கவாசகரது நூலினையே குறிப்பதாயிற்று என்பது! எனவே, இன்னோரன்ன பல திற நலமும் கருதியோர்ந்து, மாணிக்கவாசகரின் மாட்சிமையினை மதித்துணர்ந்தமை பற்றியே, குமரகுருபரர் 'காமம் சான்ற ஞானப் பனுவல்' எனவும், 'பைந்தமிழ் நவின்ற செந்நாப்புலவன்' எனவும் பாராட்டினாராதல் வேண்டும்! இது நிற்க.

காமச் சுவை

இனி, இத்திருக்கோவையாரின் செய்யுட்சுவை நலங்களை எல்லாம் முற்ற எடுத்து மொழிதல் என்பது இயலாதாகலின், 'ஒருகுழிசிச் சொன்றிக்கு ஓரவிழ் பதமாம்' என்னும் முறைமைபற்றி, ஒருசில பாடல்களை மட்டும் ஈண்டுக் காண்போம். 'எய்தலெடுத்துரைத்தல்' என்பது ஒரு துறை. ஒரு தலைவன் தலைவியைக் கூடிப் புணர்ந்து மகிழ்ந்தமையினைக் கூறுவது இதன்கருத்து. அத்துறை பற்றிப் பாடப் புகுந்த மாணிக்கவாசகர், தலைவன் தலைவி

யைப் புணர்ந்து மகிழ்ந்தான் எனக் கூறற்பாலதனைச் சிறிது மறைத்து, தலைவன் 'திரைகடலோடி' வாணிபம் செய்து பொருளீட்டினான் என்பதுபோலக் கூறுகின்றார்.

"புலவித் திரைபொரச் சீறடிப் பூங்கலம் சென்னியுய்ப்பக்
கலவிக் கடலுட் கலிங்கம்சென் றெய்திக் கதிர்கொள்முத்தம்
நிலவி நிறைமது ஆர்ந்தம் பலத்துநின் றோன்அருள்போன்(று)
உலவிய லாத்தனம சென்றெய்த லாயின ஊரனுக்கே"

என வரும் பாடல், "புலால் நாற்றம் வீசி அலைகள் மோத, சிறிய அடிப் பகுதியினையுடைய அழகிய மரக்கலத்தினை அலைகளின் தலையிற் கொண்டு செலுத்தி, எல்லா ஆறு களும் பொருள்களும் வந்து கலக்கும் கடலின்கண் சென்று, கலிங்க நாட்டினை அடைந்து, முத்து வாணிபம் செய்து, ஈட்டிய பொருள்வளத்தால் மைந்துற்று மயங்கித் தலைவன் மதுவருந்தி மகிழா நிற்பவும், அம்பலவாணரது திருவருட் செல்வம் போல அழியாத பெருஞ் செல்வமானது அவ னுக்கு எய்துவதாயிற்று" என மேனோக்காக ஒரு பொரு ளும்; "புலவியாகிய அலை வந்து மோத, காதலியின் சிற்றடி யாகிய அழகிய அணியினைத் தலைவன் தன் தலையிற் சூடுத லான் அப்புலவி நீங்கி, கலவியாகிய கடலுள் துகிலைப் பற்றிச் சென்று, பற்களாகிய ஒளிமிகுந்த முத்தத்தின்கட் பொருந்தி நிறைந்த நீராகிய மதுவைப் பருகிமகிழும் தலைவ னுக்கு, அம்பலவனது அருளையொத்து என்றும் தளர்த லில்லாத முலைகள் தலைவனுக்குச் சென்று பெறலாயின" எனப் பிறிதொரு பொருளும்படப் 'புலவி கலவி கலிங்கம் முத்தம் மதுதனம்' முதலிய சொற்கள் இரு பொருட்சிறப் புடன் அமைந்து காமச்சுவை கனிந்து, எத்துணை அழகி தாய்த் திகழ்கின்றது!

மேலும், தலைவன் தலைவியது புணர்ச்சியின்கண் உள்ளமும் உடலும் உயிரும் உணர்வும் ஒன்றாகிக் கலத்த லின் அதனைக் 'கலவி' என்றும், அக்கலவி இன்பத்தின் எல்லைக்குக் கரை காணாமையிற் 'கடல்' என்றும், கடலில் அலைபோலப் புணர்ச்சிக்கு முன் நிகழ்வது புலவியாகலின் 'புலவித் திரைபொர' என்றும், புலவி நிகழ்ந்த வழித் தலைவன் தலைவியைப் பணிந்து நிற்றல், 'மனைவி உயர்வும் கிழவோன் பணிவும், நினையுங் காலைப் புலவியுள் உரிய' என்று தொல்

காப்பியனுர் கூறுதற் கேற்ப இயல்பாகலின் 'சீறடிப் பூங்கலம் சென்னி உய்ப்ப' என்றும் ; தலைவன் பணியவே தலைவி புலவி நீங்கப் புணர்ச்சி நிகழுமாகலின், அதனைக் குறிப்பால் 'கலிங்கம் சென்றெய்தி' என்றும்; அதுபோழ்தத்துப் 'பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி வாலெயிறு ஊறியநீர்' என்று வள்ளுவனுர் கூறுமாறு போல, இதழ்நீர் பருகல் இயல்பாகலின் 'கதிர் கொள் முத்தம் நிலவி நிறைமது ஆர்ந்து' என்றும், புணர்ச்சியுட் கொங்கை வருடுபவாகலின் 'தனம் சென்றெய்தலாயின' என்றும் ; இங்ஙனம் காமச்சுவை கனியத் தொடுத்துரைப்பினும் கடவுளருளுணர்ச்சியைக் கலந்து புகுத்திப் பெருக்கச் 'சார்ந்தனன் சார்ந்தனன் சங்கலி மென்தோள் தடமுலை ஆர்ந்தனன் ஆர்ந்தனன் ஆமாத்தூர் ஐயன் அருளதே' என ஆரூரர் கூறுமாறு போல, 'அம் பலத்தான் அருள்போன்று' என்றும் ; மணிமொழியார் கூறும் திறம் எத்துணை அணிநலம் உடையதாய்த் திகழ்ந்தொளிர் கின்றது ! காமச்சுவை கனிந்ததாயினும் அருளுணர்வுடன் கலந்து சிறந்தொளிரும் இப்பாடல்,

"பவழவாய் பரவை அல்குல் என்றிவை பருகும் வேலான்
கவழமார் களிற்றை ஒத்தான் காதலி கரும்பை ஒத்தாள்
தவழ்மதுக் கோதை மாதர் தாமரைப் பூவ தாக
உமிழ்நகை வேலி னனும் ஒண்சிறை மணிவண் டொத்தான்"

எனவரும் சிந்தாமணிப் பாடல்போல வெளிப்படையாய் இழிந்து செல்லாமல், எத்துணை மேம்பாடுடையதாக விளங்குகின்றது !

ஞானப் பொருள்

'உயிரென வியத்தல்' என்பது ஒரு துறை, இயற்கைப் புணர்ச்சிக்கண் தலைவியைக்கூடி இன்புற்றுப் பிரிந்து சென்ற தலைவன், பின்னர் மறுநாள் அப்பொழிலிடைப் போந்து அவளைக் கண்டு மகிழ்ந்து, தன்னுயிரென அவளை வியந்து கூறுதல் இதன் கருத்தாம். இக்கருத்தமையக்.

'. காணு மாயிற் றுயிரென மொழிவோர்
நாணிலர் மன்ற பொய்ம்மொழிந் தனரே
யாஅம் காண்டுமெம் அரும்பெறல் உயிரே

சொல்லும் ஆடும் மென்மெல இயலும்
கணைக்கால் நுணுகிய நுசுப்பின்
மழைக்கண் மாதர் பணைப்பெருந் தோட்டே ''

எனப் பழம் பாடல் ஒன்று வரும். அதனைத் தழுவி, "நேற்று அன்புடன் என்னைக் கூடிப் பின்னர், என் மனம் வருந்தப் பிரிந்து சென்று. தோழியர் கூட்டத்திற் சேர்ந்து, இன்பத்தைச் செய்தலின் அமிழ்தமாய், துன்பத்தைச் செய்தலின் அணங்காய், அரன் அம்பலம் போலும் ஒளியை யுடையதாய், என் உள்ளத்தின் கண்ணதாய், பெரிதும் வஞ்சனை யுடையதாய் இதோ என்னுயிர் வந்து நிற்கின் றது '' என்னும் பொருளமைய,

"நேயத்த தாய்நென்னல் என்னைப் புணர்ந்துநெஞ் சம்நெகப்போய்
ஆயத்த தாய்அமிழ் தாய்அணங் காய்அரன் அம்பலம்போல்
தேயத்த தாய்என் றன் சிந்தைய தாய்த்தெரி யிற்பெரிதும்
மாயத்த தாகி இதோவந்து நின்றதென் மன்னுயிரே ''

என்னும் அழகிய பாடலை மாணிக்கவாசகர் அருளிச் செய் கின்றார். தலைவன் தன் தலைவியை உயிரென வியத்த லாகவே அடிகள் இதனைப் பாடினர் போலத் தோன்றினும், ஊன்றி நோக்குவார்க்கு இறைவன் தமக்குச் செய்த திரு வருளின் திறத்தினையே சிறந்தெடுத்துப் பாடிப் பரவின ராதல் தெளியப்படும். என்பால் அருளுடையதாய், முன் னர்த் திருப்பெருந்துறையில் குருந்தமர நீழலில் வந்து என்னைக் கூடி, பின்னர் என் உள்ளம் 'தீயில் வீழ்கிலேன் திண்வரை உருள்கிலேன் செழுங்கடல் புகுவேனே' என வருந்துமாறு பிரிந்து சென்று, தன் மெய்யடியார் கூட்டத்த தாய், நினைக்குந்தொறும் அமிழ்தம் போல இன்பம் செய்து கட்புலனாகாமையால் துன்பம் செய்து, தில்லையம்பலம் போல பலநல்ல தலங்களில் எழுந்தருளி, என் மனத்தினும் நிலைபெற்று, இங்ஙனம் தான் ஒரு பொருளே பல பண்பும் செயலும் உடைமையின் வஞ்சனை மிக்கதாய், என் மன்னுயி ராக முழுமுதற் பெரும்பொருள் ஈண்டு வந்து தோன்று நின்றது '' என இறையருட்டிறம் விளக்கும் பிறிதொரு பொருளும் அமைய, இப்பாடல் இயன்றுண்மை கண்டு கொள்க!

இங்ஙனமே, மீண்டும் 'புனல்தருபுணர்ச்சி' யுரைத்துத் தோழிக்குக் குறைநேரும் தலைமகள் கூற்ருக,

" ஓங்கும் ஒருவிடம் உண்டம் பலத்தும்பர் உய்யஅன்று
தாங்கும் ஒருவன் தடவரை வாய்த்தழங் கும்அருவி
வீங்கும் சுனைப்புனல் வீழ்ந்தன் றழுங்கப் பிடித்தெடுத்து
வாங்கும் அவர்க்கறி யேன்சிறி யேன்சொல்லும் வாசகமே"

எனவரும் பாடற்கண், அத்துறைக்குரிய பொருள்மட்டுமேயன்றி, " பிறவிக் குட்டத்தில் யான் விழுந்து கெடப்புகும் நிலையில், தாமே வலிந்து வந்து பிடித்தெடுத்து அதனினின்றும் என்னைக் காத்தருளிய பேருதவியாளராகிய இறைவனுக்குச் சிறியேனுகிய யான் நன்றியுரையாகச் சொல்வதொன்றினையும் அறிகின்றிலேன்" எனப் பிறிதுமொரு பொருள்பட்த் தம்மைப் பிறவிக் கடலின் வீழாமல் காப்பாற்றிய இறையருட் செய்தியினை விதந்துரைத்தல் காண்க.

இவ்வாறே "வருவன செல்வன தூதுகள் ஏதில" எனவும், " திருந்தேன் உயநின்ற சிற்றம்பலவர்" எனவும் தொடங்கும் பாடல்களிலும் முறையே அவற்றிற்குரிய "தூதுகண் டழுங்கல்", "ஊடல் நீட வாடியுரைத்தல்" என்னும் துறைப்பொருள்களின் வேருக "தன் மெய்யன்பர்களைப்போல, அன்பில்லாத யானும் இன்புறுமாறு, உள்ளம் உருக்கும் கலவிகளை (அருளிச் செயல்களை) என்பால் முன்னம் செய்து, பின்னர் எனது உயிர் பிரிந்து போயினுற்போலத் தான் பிரிந்து சென்று, ஒரு ஞான்றும் கட்புலனுகாமையின் தன்னையே நினைந்து யான் வருந்துமாறு செய்த காதலர் (இறைவன்) இன்று என் திறத்தில் யாது செய்ய எண்ணி இருக்கின்றனரோ? எனவும்; "ஒருவாற்ருனும் திருந்தப் பெருதவனுய், தன்னை அடைதற்கு எத்தகைய முயற்சியும்செய்யாமல்கிடந்த எளியேன் பிறவித் துன்பத்தினின்றும் தப்பிப் பிழைக்குமாறு, தானே ஞானசிரியனுய் எழுந்தருளி வந்து, தனது, இணைமலர்க் கண்ணினது இனிய கடைக்கணேக்கத்தினை யருளிப், பெருந்தேனைப் போன்று இனியதாய், கல்லினும் வல்லென்ற என் நெஞ்சமும் நெகிழ்ந் துருகும்படி, " வாவா என்றென்னைப் பூதலத்தே வலித்து"ப் பிடித்தாண்டு கொண்ட நமது பெண்

ணமிழ் தம் (அம்மையப்பர்) என்வும் பிறிதோர் உட்பொருளும் படுமாறு, அடிகள் அருளிச் செய்துள்ள அருமை பெருமைகள் அறிஞர்க்குப் பெருவிருந்தாதற்பாலன.

கலையுணர்வும் அருளுணர்வும்

சங்ககாலப் புலவர்கள் கலையுணர்வுக் கண்கொண்டு பாடினராக, மாணிக்க வாசகர் இறையருளுணர்வுக் கண்கொண்டு பாடினர் என முன்னர்க் கூறினோம். அதனை இரண்டொரு சான்றுகளாற் காண்போம்! சங்க காலப் புலவர்கள் கடல், மலை, காடு, வயல் முதலிய பலவற்றினையும் குறித்துப் பாடியுள்ளனர். நெய்தற்றிணை பற்றிப் பாடிய சங்கப் புலவர்கள் அனைவரும் கடலைப் பாடியுள்ளனர். அவர்களெல்லாம் கடலின் அலை, கழி, கடல்படு பொருள்கள், கடற்கரைக்கண் வாழும் பரதவர் வாழ்க்கை முதலியன குறித்தே பாடிச் சென்றனர்! ஆனால் மாணிக்க வாசகரோ கடலைப் பாடினராயினும், அக்கடலையும் சிவமெனும் செம்பொருளாகவே கண்டு கருதிப் பாடினர். இச் செம்பொருட் காட்சி மாணிக்க வாசகர்க்குப் போலச் சங்கப் புலவர்கட்கு வாய்த்திலது! "கடலில் சங்குகள் உள்ளன. அவை முத்துக்களை ஈனுகின்றன. அவற்றைக் கழிகளின் வாயிலாக நாம் பெறுகின்றோம். கடலில் கங்கை முதலிய யாறுகள் வந்து கலக்கின்றன. ஆரவாரம் மிக்க மரக்கலங்கள் இயங்குகின்றன. அத்தகைய இக்கடல், தன் திருவடிக்கண் எமக்கு நிகழும் அன்பின் பற்று எமக்குக் கொடுக்கும் முத்தியினை யாம் பெறுமாறு எல்லாப் பொருள்களையும் தன்னுள் அடக்கிக்கொண் டிருக்கும் வானத்தினையும் கடந்து நிற்கும். தான் ஒரு மானுட வடிவு கொண்டு எழுந்தருளிப் பொங்கும்புனற்கங்கையாற்றினைச் சடையிற் சூடி, ஆரவாரம் மிக்க பாறு (பருந்து, கழுகு) என்னும் பறவைகள் சூழ்கின்ற உயர்வுமிக்க தலையோட்டை ஏந்தும் சிவபெருமானை ஒத்துளது" எனக் கடலைச் சிவபெருமானோடு ஒப்புடையதாகக் கண்டு, மென்மொழியும் வன்மொழியும் விரவிக் கூறிய தோழிக்குத் தலைவி "அறியாள் போன்று குறியாள் கூறல்" ஆக,

"சங்கந் தரும்முத்தி யாம்பெற வான்கழி தான்கெழுமிப்
பொங்கும் புனற்கங்கை தாங்கிப் பொலிகலிப் பாறலவு

தங்கம் மலிதலை எந்தலின் ஏந்திழை ! தொல்லைப்பன்மா
வங்கம் மலிகலி நீர்தில்லை வானவன் நேர்வருமே ''

எனப் பாடிய மணிமொழியாரது இறையருளுணர்வின் சிறம்பினை என்னென்பேம் !

இங்ஙனமே பெண்களின் கண்களைச் சங்ககாலப் புலவர்கள் முதல் இஞ்ஞான்றைக் கவிஞர்கள்வரை புனைந்து புகழ்ந்து பாடாதாரில்லை. எனினும், "தலைவியின் கண்கள் இறைவன்பால் தாம் வைத்த அன்பு போல அகன்றும், அவ்விறைவன் போக்கிய தம் தீவினைகளைப்போன்று கறுத்தும், தில்லையின் ஒளியை ஒத்தும், அப்பெருமான் தனது சிவந்த தோள்களில் அணியும் வெண்ணீற்றினைப் போலச் செவ்வரி ஓடி வெண்மை மிக்கும் அவனது பூங்கழலின் 'பொருள்சேர்' புகழினைப் போல நீண்டும் உள '' (109) என மணிமொழியார் கண்ணிற்கு இலக்கணம் காட்டிப் பாடியவாறு போல அருளுணர்வு கலந்து பாடினர் எவரேனும் உளரோ ? இன்னோரன்ன கோவைத் திருப்பாடல்கள் ஆளுடைய அடிகளின் கலையுணர்வையும் அருளுணர்வையும் நலமுற விளக்குவனவாம்.

சங்கநூற் பயிற்சி

மாணிக்கவாசகர் சங்க காலத்தை அடுத்துத் தோன்றியவர். சங்ககாலப் பண்பாட்டினை அழியாமற் காக்க விரும்பி முயன்றவர். அதற்காகவே காதலுணர்ச்சியோடு கடவுளுணர்ச்சியையும் ஒருங்கே பிணைத்துத் திருக்கோவையார் பாடினர் என முன்னர்க் கூறினமாதலின், அவர் தம் சங்கநூற் பயிற்சியின் பெற்றியினையும் இரண்டொரு சான்றுகளாற் காண்போம்.

பரத்தையர் சேரியினின்றும் போந்த தலைமகன், தன்பாற் புலவிகொண்ட தலைவியின்பால், "நின்னை யன்றி யான் பிறர் ஒருவரையும் அறியேன்'' என்று பொய் கூறினானாக. இங்ஙனம் நீ பொய் கூறுவது எற்றுக்கு ? இன்று காலை யாவரும் விழையும் நம் பொலந்தொடிப் புதல்வன் தெருவில் தேர் விளையாடிக் கொண்டிருந்தான். அப்பொழுது அவ்வழியே ஒருத்தி வந்தாள். வந்தவள், அவ

ளோடு நின்னிடையுள்ள உருவ ஒப்புமைகள் பலவும் கண்டு களிகூர்ந்து சுற்றுமுற்றும் பார்த்தாள். பின்னர்த் தன்னைக் காணுநர் யாரும் இலர் எனக் கருதி, அவனைக் 'குழந்தாய்! என்னுயிரே! வருக!' என்று கூறி எடுத்துத் தன் மார்போடு அணைத்துக்கொண்டு மிகவும் மகிழ்ந்து கொண்டிருந்தாள். அதுகாலைத் தற்செயலாக யான் குழந்தையைத் தேடிக்கொண்டு அங்குச் செல்ல நேர்ந்ததாக யான் அவளைக் கண்டேன். அவளும் என்னைக் கண்டுகொண்டாள். அதனால் அவள் நெஞ்சம் துணுக்குற்று முகம் சிறிது மாறுபட்டு நாணி மயங்கி நின்றாள். காரணமின்றி என்னைக் கண்டு துணுக்குற்று நாணி மயங்கி நின்றமையின், 'அவள் யாவள்?' என நுண்ணிதின் ஓர்ந்து நோக்கித் தெளிந்து கொண்ட யான், 'குறுமகளே! ஏன் மயங்குகின்றாய்? நீதானும் இவனுக்கு ஒரு தாயே ஆகற்பாலை. இங்கே வருக' என்று அவளை அழைத்தேன். அவளும் விரைந்தோடி வந்து என்னைத் தழுவிக்கொண்டு, களவுடம் படுநரிற் கவிழ்ந்து நிலங்கிளைத்து நாணி நின்றாள். அங்ஙனம் நின்ற அவளது நிலையும் இயல்பும் கண்டு, 'பொற்பும் கற்பும் மற்றும் பிற நற்பண்பும் உடைய இவள், நின் புதல்வனுக்குத் தாயாகும் முறைமையினளாதல் பொருத்த முடையதேயாகும்' என்று நினைத்து உள்ளம் தெளிந்து, மகிழ்ச்சியுற்று அவளை விரும்பிப் பாராட்டினேன். இவ்வாறு நினது பரத்தையை யான் நேரே கண்டறிந்து கொண்டுவிட்டேனாகவும், என்னிடம் நீ 'யான் யாரையும் அறியேன்' எனப் பொய்கூறி ஏமாற்றக் கருதுவது என்னை? என்னும் பொருளமைய அகநானூற்றில் (16) சிறந்ததொரு பாடல் வருகின்றது! அப்பாடலைத் தழுவி,

"ஐயுற வாய்நம் அகன்கடைக் கண்டுவண் தேர்உருட்டும்
மையுறு வாட்கண் மழலைத் தழுவமற் றுன்மகனே
மெய்யுற வாம்இதுன் இல்லே வருகென வெள்கிச்சென்றாள்
கையுறு மான்மறி யோன்புலி யூர்அன்ன காரிகையே"

எனத் திருக்கோவையாரின்கண் வரும் அழகிய பாடல், மாணிக்கவாசகரது சங்கநூற் பயிற்சியின் மேன்மையினை

யும் ஈடுபாட்டினையும் இனிது விளக்கும் சான்றாக நிலை பெறும்.

இஃதொன்றோ! தலைவனுடன் உடன்போக்குச் சென்ற தலைவியைத் தேடிக்கொண்டு செல்லும் செவிலித்தாய், சுர நெறியில் முக்கோற் பகவரை எதிர்ப்பட்டு, "எறிக்கும் வெயிலினை மறைக்கும் குடையினை ஏந்திக்கொண்டு அதன் நிழலில், கரகத்தையும் முக்கோலையும் தோளிலே வைத்துக் கொண்டு, புலனடக்க முடையவராய் இறைவனையே நினைந்து செல்லும் இயல்பான ஒழுக்கமுடைய அந்தணர் களே! கொடிய இக்காட்டு நெறியிற் செல்லும் நீவிர், இவ் வழியே என் மகள் ஒருத்தியும் பிறள்மகன் ஒருவனும் பிறர் அறியாமல் தம்மிற்றாமே கூடினவராய் இதுபொழுது அதனைப் பிறர் அறிந்துகொள்ளும் நிலையினராய் உடன்போக் கிற் சென்றனர். அத்தகையர் இருவரை நீவிர்கண்டீரோ?" என வினவ, "காணாதிருந்தேம் அல்லேம்; கண்டனம், இக் காட்டில் ஆணெழில் அண்ணலோடு அருஞ்சுரம் முன்னிய மாணிழை மடவரலுக்கு, நீர் தாய்போலக் காணப்படுகின் றீர்! மலையிலே பிறக்கும் சந்தனம் பூசிக்கொள்பவர்களுக் கல்லது அம்மலைக்கு என்ன பயனைத் தரும்? நீரிலே பிறக் கும் வெண்முத்தும் மாலையாகத் தொடுத்து அணிந்துகொள் பவர்களுக்கல்லது அந்நீருக்கு என்ன நன்மையைச் செய்யும்? யாழிற் பிறக்கும் ஏழுவகை இன்னிசை அதை எழுப்பு வார்க்கும் கேட்பார்க்கும் (பாடுவார்க்குப்) பயனளிப்ப தன்றி, அவ்யாழுக்கு யாதுநலனை அளிக்கும்? அதுபோல நும்மகளும் பயன்படும் பருவத்தில் நுமக்குப் பயன்படாள். ஆதலால், மிகுந்த கற்பினையுடைய அவள் பொருட்டுத் துன்புற்றுக் கவலை எய்துதல் வேண்டா! அவள் தன் தாய் தந்தையரினும் சிறந்த கணவனை வழிபட்டு அவன் பின்னே சென்றாள். அவளது செயல் இம்மைக்கும் மறு மைக்கும் நலம் பயப்பதாகும்" என முக்கோற் பகவர் மொழிவதாக, ஓர் அழகிய இனிய பாடல் (9) கலித்தொ கையின்கண் வருகின்றது. அப்பாடலின் சொற்பொருட் சுவைகளில் ஈடுபட்டு மகிழ்ந்து,

"சுரும்பிவர் சந்தும் தொடுகடல் முத்தும்வெண் சங்கும்,ஏங்கும்
விரும்பினர் பாற்சென்று மெய்க்கணி யாம்வியன் கங்கைஎன்னும்

பெரும்புனல் சூடும் பிரான்சிவன் சிற்றம் பலம்அனைய
கரும்பன மென்மொழி யாரும்அந் நீர்மையர் காணுநர்க்கே"

என ஆளுடைய அடிகள் பாடியுண்மை கண்டுகொள்க! மற்றும், இக்கலித்தொகைப் பாடலினை அடிப்படையாகக் கொண்டே, திருக்கோவையாரில் 242 முதல் 249 வரையுள்ள எட்டுப் பாடல்களாக விரித்துரைத்து நம்மை மகிழ்விக்கின்றார் அடிகள்! இங்ஙனமே, தொல்காப்பியம், திருக்குறள், இறையனார் களவியலுரை, சிலப்பதிகாரம், குறுந்தொகை, நற்றிணை முதலிய சங்கநூற் சொற்பொருள் சுவைநலங்களையெல்லாம் கற்றுணர்ந்து ஈடுபட்டுத் திளைத்துமகிழ்ந்து, அவை தம்மைத் தழுவித் தம்நூலினை அழகுற யாத்திருக்கும் திறம், நம்மனோர்க்குப் பயில்தொறும் கழிபெருங்களிப்பூட்டாநிற்கும்! இவ்வாற்றால் அடிகளின் சங்கநூற் பயிற்சியினை ஒருவாறு உணர்ந்துகொள்க!

உள்ளுறைப் பொருள்நலம்

சங்கநூல்களின் சிறப்பியல்புகளில், அவற்றின் உள்ளுறைப் பொருள்நலமும் ஒன்றாகும். உள்ளுறை யமைத்துப் பாடுதலில், நுண்மாண் நுழைபுலம் மிக்க சங்ககாலச் சான்றோர்களைப்போல, பிற்காலப் புலவர்கள் திறமை பெற்றிலர். பிற்காலப் புலவர்களின் பாடல்களில் உள்ளுறைப் பொருள்நலம் காண்டல் பெரிதும் அரிதேயாம். தம்பாடல்களில் உள்ளுறைப் பொருள்நலம் செறியப்பாடும் கவிதைத்திறம், சங்க காலப் புலவர்களோடு பெரும்பாலும் மறைந்து விட்டதென்றே கூறுதல் தவறாகாது! ஆனால், நம் மணிவாசகரோ சங்க காலப் புலவர்களோடொப்ப உள்ளுறை யமைத்துப் பாடவல்ல கவிதைத் திறம் மிக்க நல்லிசைப் புலவராவர்!

பொருள்வயிற் பிரிந்து ஒருவழித் தணந்த தலைமகன் வரவும் வரைவும் நீட்டிப்ப ஆற்றாளாய தலைவி, 'நீ தலைவன் வாராமைக்காக வருந்தற்க; வருந்துதியாயின், அது பிறர்ஐயுறுதற்கு ஏதுவாகித் தீங்கு பயக்கும்' என்று கூறிய தோழியை நோக்கி, 'தலைவனைப் பிரிந்தும் மனம் வருந்தாது, 'அரிதாற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிவாற்றிப்

பின்னிருந்து வாழ்வார் பலர்! ஆனால் யானோ அது பெறு மாறில்லை. தலைவனது பிரிவை இமைப்பொழுதும் ஆற்றி யிருத்தற்கு என்றால் இயல்கின்றிலதே! யான் என் செய் வேன்? இஃதறியாது என்னை ஆற்றியிரு என்று நீ தேற் றுரை புகல்வது, 'உருள்கின்ற மணிவட்டைக் குணில் கொண்டு துரந்ததுபோல்' எனக்கு மேலும் ஆற்றாமை யினையே விளைவிக்கின்றது எனக் கூறுதலாக வரும்.

"வந்தாய் பவரைஇல் லாமயில் முட்டை இளையமந்தி
பந்தா டிரும்பொழிற் பல்வரை நாடன்பண் போஇனிதே
சொந்தார் நறுங்கொன்றைக் கூத்தன்தென் தில்லைதொழார்குழுப்
சிந்தா குலமுற்றுப் பற்றின்றி நையும் திருவினர்க்கே" [போல

என்னும் அரிய திருப்பாடலில் அமைந்துள்ள உள்ளுறைப் பொருள்நலம், கலையறிஞர்க்குக் கழிபெருவிருந்தாம்.

இதன்கண் தலைவனின் குன்ற நாட்டின் இயல்பினைக் கூறுவாள்போல, எத்துணை அழகுறத் தோழியின் வன் புறைக்கெதிரழிந்து இரங்குகின்றாள் தலைவி! 'தோழியே! நின்செயல், நம் தலைவனின் மலைநாட்டில் மயில்கள் இடும் முட்டைகள் அவற்றால் அடைகாக்கப் பெறாது, பாறை களின்மேல் தனித்துக் கிடப்ப, மயிலின் ஈன்ற வருத்தமும் முட்டையின் மென்மையும் அறியாத இளங்குரங்குக் குட்டிகள் அவற்றைக் கொண்டு பந்தாடுதல் போன் றல்லவா உளது!' என்னும் குறிப்பமைய; மயில் தலைவ னாகவும், முட்டை தலைவியாகிய தானாகவும், முட்டை அடைகாக்கப் பெறாது தனித்துக் கிடத்தல் தலைவனால் தண்ணளி செய்யப்பெறாது தான் வருந்துதலாகவும், இள மந்தி தோழியாகவும், பந்தாடுதல் தோழி தேற்றுதலும் அயலார் அலர் தூற்றுதலுமாகவும் பொருத்தமுற இயைத்து, உள்ளுறைப் பொருள்நலம் செறியத் தலைவியின் கூற்றில் வைத்துப் பாடிய மணிமொழியாரின் அணிதிகழ் இப்பாடல்,

"கான மஞ்ஞை அறையீன் முட்டை
வெயிலாடு முசுவின் குருளை உருட்டும்

குன்ற நாடன் கேண்மை என்றும்
நன்றுமன். வாழி தோழி உண்கண்
நீரொடு ஓராங்குத் தணப்ப
உள்ளா தாற்றல் வல்லுவோர்க்கே"

எனவரும் குறுந்தொகைச் செய்யுளோடு ஒப்புநோக்கி வைத்துணர்ந்து மகிழற்பாலது! இங்ஙனம் திருக்கோவையாரிற் சுவைகெழுமவரும் இனிய செய்யுட்கள் பலப்பல. அவை தம்மையெல்லாம் ஈண்டெடுத்து விரித்து விளக்குதல் இயலாதாகலின், 128, 133, 159, 168, 193, 250, 251, 254, 257, 260, 262, 265, 369, 381 என்னும் எண்ணுள்ள பாடல்களிற் கண்டு மகிழ்ந்து இன்புறுக! எனவே, இவ்வாற்றாலும் மாணிக்கவாசகரின் மாட்சிமைகள் பலவும் புலனும் என்பது.

திருக்கோவையார் உரைநலங்கள்

சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள், மிகவும் சிறந்த பழைய உரையினை முழுவதும் பழுதின்றி வாய்க்கப் பெற்ற விழுமியநூல் திருக்கோவையாரேயாகும். தமிழ் மொழிக்கண் உள்ள மிகவும் சிறந்த விரல்விட்டு எண்ணத் தகுந்த ஒருசில அரிய உரைநூல்களுள், திருக்கோவையார் உரையும் ஒன்றாய்ச் சிறந்து திகழ்வதாகும். திருக்கோவையாரின் உயர்வற உயர்ந்த பெருமையினை உணர்ந்து கொள்ளுதற்கு அவ்வுரை பெரிதும் துணை செய்தலின், அதன்கண் முன்பின் இயைபு விளக்க வேண்டாதனவாய், எளிதிற் சொல்லவும் உணரவும் படுவனவாய், பொதுவாய், முதன்மையாக விளங்கும் சுவைமிகுந்த ஒருசில சிறந்த உரைப்பகுதிகளை மட்டும், பலர்க்கும் பயன்படுதல் குறித்து ஈண்டுப் பெயர்த்தெடுத்துத் தொகுத்துத் தருகின்றேன்.

திருக்கோவையாரின் முதற்பாடற்கும் இறுதிப் பாடற்கும் 72, 148, 225 என்னும் எண்ணுள்ள பாடல்களுக்கும், பேராசிரியர் வகுத்துள்ள உரை பெரிதும் சுவை கெழுமிச் சிறந்து திகழ்வதாகும். அவ்வுரைப் பகுதி முழுதினையும்

நூலுட் கண்டுகொள்க! "அணிஎன்றார் அழகு செய்த லான். அமிழ்து என்றார், கழிபெருஞ் சுவையோடு உறுதி பயத்தல் உடைமையான். ஆவி என்றார், காதலிக்கப்படும் பொருள்கள் எல்லாவற்றினும் சிறந்தமையான்..." (5). உணர்ந்தார்க்கு உணர்வரியோன்—ஒருகால் தன்னை உணர்ந் தவர்கட்குப் பின் உணர்தற்குக் கருவியாகிய சித்த விருத் தியும் ஒடுங்குதலான் மீட்டு உணர்வரியோன், தவத்தானும் தியானத்தானும் எல்லாப் பொருள்களையும் உணர்ந்தார்க் கும் உணர்வரியோன் (9) பிறர்கண் போலாது மூன்றாய் இருந்தனவாயினும், அவைதாம் ஓர் அழகுடைய என்னும் கருத்தால் 'ஏர்கொள் முக்கண்' என்றார் (18) அடுக்கிய விளிகளாற் காதற் சிறப்பு விளங்கும் (47) கூத்தப்பிரான் என்பது, கூத்தனுயினும் பிரானுயுள்ளான் என்றவாறு (30) தனக்குத் தக்க தையலை இடப்பக்கத்தில் வைத்தான் என்றும், தன் அடியார்க்குத் தகாத என்னை அவர்க்குக் கொடுத்தான் என்றும், அணிதற்குத் தகாத பாம்பை அணிந்தான் என்றும், தனக்குத் தகும் அம்பலத்தைத் தனக்கு இடமாகக் கொண்டான் என்றும் மாறுபாட்டு ஒழுக்கம் கூறியவாறும். (54) அடைந்தார் பிழைப்பின், தலையாயினார் பிழையை உட்கொண்டமைதலும், இடையா யினார் அவரைத் துறத்தலும், கடையாயினார் அவரைக் கெடுத்தலும் உலகத் துண்மையின், அம்மூவகையும் செய் யாது காப்பவன் இறைவன் (65) பிறர் கூறும் பெருமை அவர்க்கு இன்மையிற் 'பொய்வானவர்' என்றார். இறை வனோடு ஒருங்கு வைத்து எண்ணப்பெறும் இனமல்லரா யினும், இனமாக உலகத்தாராற் கூறப்படுதலின் அவ் வாறு கூறினார். 'மூவரென்றே எம்பிரானொடும் எண்ணி' என்பதூஉம் அக்கருத்தே பற்றி வந்தது. எனக்குப் பொறி யுணர்வல்லது இன்மையின், கண்கவரும் திருமேனி காட்டி என்னை வசியம் செய்தான் என்னும் கருத்தால் 'உய்வான் புகத்தில்லை நின்றேன்' என்றார் (67) குற்றேவல் செய் வார்கள் மாட்டுப் பெரியோர் செய்யும் அருள் எக்காலத்தும் ஒரு தன்மைத் தாய் நிகழாது" (81).

(தொடரும்)

சைவப் புலவர் தேர்வு விஞக்கள்

1. இலக்கியப் பகுதி

நேரம் 3 மணி] [மதிப்பெண் 100

1. எண் குணத்தான் தாளே வணங்காத்தலே பயனில என்பதற்குத் திருவள்ளுவர் கூறிய உவமை யாது? எண் குணங்களாவன யாவை?

2. கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் என்னும் நான்கதிகாரங்களும் இம் முறையில் அமைதற்குரிய காரணத்தைக் குறிப்பிடுக. அல்லது எழுமை எழுபிறப்பாவன இவையெனக் குறிப்பிடுக.

3. புலால் மறுத்தல், மெய்யுணர்தல் என்னும் அதிகாரங்களில் ஏதாவது ஓரதிகாரத்திற் கூறப்பட்ட பொருள்களைத் தொகுத்து வரைக.

4. 'நிலத்தறைந்தான் கை பிழையாதற்று' எனச் சொல்லப்பட்டது எது? அதனே விளக்குக.

5. நல்லவை யெல்லாஞ் தீயவாம் தீயவும்
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு

இத்திருக்குறளின் பொருளேவிளக்கி இக்குறள் இன்ன அதிகாரத்திலுள்ளதென்பதனேயும் குறிப்பிடுக.

6. திருவிசைப்பாவில் 'ஒளிவளர் விளக்கே' எனத் தொடங்கும் முதல் திருப்பதிகத்தைப் பாடிய ஆசிரியர் யாவர்?

7. திருவிசைப்பாவில் தேவார ஆசிரியர் வரலாற்றுச் செய்திகளாகக் கூறப்பட்டன யாவை?

8. படமதமும் இடவயிறும் உடைய களிருடைய பிரான்
அடியறிய வுணர்த்துவதும் அகத்தியனுக் கோத்தன்றே
இடுவது புல்லேலருெருதுக் கொன்றினுக்கு வையிடுதல்
கடுவிதுவோ திருத்தில்லே நடம்பயிலும் நம்பானே.

இப்பாடற் பொருளே விளக்குக?

9. கருவூர்த் தேவரைப் பற்றியோ சேந்தனாரைப் பற்றியோ நீவிர் அறிந்தவற்றை எழுதுக ?

10. சூரிய காந்தமுஞ் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தஞ் சூழ்பஞ்சைச் சுட்டிடா
சூரியன் சந்நிதியிற் சுடுமாறு போல்
ஆரியன் தோற்றமுன் அற்ற மலங்களே

இத்திருமந்திரப் பாடலுக்குப் பொருள் கூறுக ?

11. "உப்பெனப் பேர் பெற்றுருச் செய்த அவ்வுரு அப்பினிற் கூடிய தொன்றாகுமாறு போல்" இவ்வுவமை எதன் பொருட்டுக் காட்டப்பட்டது ?

12. நக்கீரர் திருமுருகாற்றுப்படை பாடிய சந்தர்ப்பத்தைக் குறித்து வழங்கும் கதை யாது? அக்கதை பொருத்தமுடையதுதானா ?

13. முருகப்பெருமான் ஆறு திருமுகங்களாலும் உயிர்கட்கு அருள்செய்யும் முறையினை நக்கீரர் எவ்வாறு பாராட்டுகின்றார் ?

14. திருவாவினன் குடியில் முருகனை வழிபடுதற்கு முற்புகுந்த துனியில் காட்சி முனிவரது பெருமையினைப் புலப்படுத்துக.

15. அம்மையார் இறைவனை நோக்கி, 'இருபாலும் நின்னுருவமாக நிறந்தெரிய மாட்டோம்' எனக் கூறுதற்குரிய காரணம் யாது ?

16. "காலையே போன்றிலங்கு மேனி கடும்பகலின் வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு – மாலையின் தாங் குருவே போலுஞ் சடைக்கற்றை மற்றவற்கு, வீங்கிருளே போலும் மிடறு" இப்பாடலின் அமைந்த நயத்தை விளக்குக ?

17. 'அறிந்தாடும் ஆற்றாது அரங்கு' என இறைவனை நோக்கி அம்மையார் கூறியது ஏன் ?

18. புனிதவதியாருடைய கணவன் பரமதத்தன் அவ்வம்மையாரைப் பிரிந்து செல்லுதற்குரிய காரணம் யாது?

19. " யான் உமதருளால் வாழ்வேன்
இவ்விளங் குழவி தானும்
பான்மையால் உமது நாமம்
என்றுமுன் பணிந்து வீழ்ந்தான் "

இத்தொடர்ப் பொருளை விளக்கிச் சந்தர்ப்பம் கூறுக.

20. தலையினால் நடந்திங்கேனும் எம்பெருமானே ரெற்பின் யாக்கை யன்பென்னே " இது யார் கூற்று? இதற்கு இறைவன் கூறிய மறுமொழியைக் குறிப்பிடுக.

II. சாத்திரப் பகுதி

நேரம் 3 மணி] [மதிப்பெண் 100

1. மெய்கண்ட தேவர் வரலாற்றைச் சுருக்கி வரைக?

2. " ஒடுங்கின சங்காரத்தினல்லது உற்பத்தியில்லை" இத்தொடர்ப் பொருளை விளக்குக.

3. " அத்துவிதம் " என்னும் சொல்லுக்கு மெய்கண்டார் கொண்ட பொருள் இதுவென விளக்குக.

4. விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்
களந்தறிந் தறியா ஆங்கவை போலத்
தாந்தம் உணர்வின் தமியருள்
காந்தம் கண்ட பசாசத் தவையே

இச்சூத்திரத்திற்கு பொழிப்புரை எழுதுக.

5. ஒன்பதாஞ் சூத்திரப் பொருளைத் தொகுத்து வரைக அல்லது பாசக்ஷயம் பண்ணுமா றுணர்த்திய சூத்திரம் இதுவென வரைந்து பொருள் கூறுக.

6. மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்குஞ்
சிறப்பில்லார் தந்திரத்துச் சேர்வை—அறப்பித்துப்
பத்தர் இனத்தாய்ப் பரனுணர்வி னாலுணரும்
மெய்த்தவரை மேவா வினை.

இவ் வெண்பாவின் பொருளை விளக்குக.

7. அளவை எத்தனை வகைப்படும்? உதாரணங் காட்டி விளக்குக.

8. "மேலைக்கு வித்துமாகி விளைந்தவை யுணவுமாகி
ஞாலத்து வருமா போல"

இவ்வுவமை எதன் பொருட்டுக் காட்டப்பட்டது ?

9. ஓது சமயங்கள் பொருளுணரு நூல்கள்
ஒன்றோ டொன் றொவ்வாமல் உள ?

இவற்றுள் உண்மையான சமயம் யாது? உண்மை நூல் யாது? என்னும் வினாக்களுக்கு அருணந்தி சிவாசாரி யார் கூறும் மறுமொழியைக் குறிப்பிடுக.

10. சிவஞானச் செய்தி யுடையோர் எவ்வாறிருப் பார்கள் ?

11. திருவுந்தியார் ஆசிரியர் யாவர்? அவருடைய மாணுக்கர் செய்த நூல் யாது ?

12. தாக்கியே தாக்காது நின்றதோர் தற்பரம்
நோக்கிற் குழையுமென் றுந் தீபற
நோக்காது நோக்கவென் றுந் தீபற

இதன் பொருளை விரித்தெழுதுக.

13. கிடந்த கிழவியைக் கிள்ளி யெழுப்பி
உடந்தை யுடனே நின்றுந் தீபற
உன்னையே கண்ட தென்றுந் தீபற

இதனுற் சுட்டப்பட்ட பொருளிதுவெனப் புலப்படுத்துக.

14. பாலைநெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதும்
காலனை அன்றேவிக் கராங் கொண்ட—பாலன்
மரணந் தவிர்த்ததும் மற்றவர்க்கு நந்தங்
கரணம்போ லல்லாமை காண்.

இத் திருப்பாடலிற் குறிக்கப்பட்ட வரலாறுகள் யாவை? அவற்றால் இந்நூலாசிரியர் அறிவுறுத்திய பொருள் யாது ?

15. வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை என்றமையால்
வேண்டின் அஃதொன் றுமேவேண்டுவது—வேண்டிலது
வேண்டாமை வேண்டவரும்என் றமையால்வேண்டிடுக
வேண்டாமை வேண்டுமவன் பால்.

இதன் பொருளைத் தெளிவாக எழுதுக.

மதிப்புரை

திருவாசகம்-திருவெம்பாவை உரை

விலை ரூ. 1–8–0. பக்கம் 96. கிடைக்குமிடங்கள் : 1. சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 1/40, பிராட்வே, சென்னை - 1. 2. பண்டித. மீ. கந்தசாமிப் புலவர், செயலாளர், மதுரைத் திருவள்ளுவர் கழகம், வடக்கு ஆடி வீதி, மதுரை. 3. செட்டிநாடு அச்சகம், தேவகோட்டை.

மகா மகோபாத்யாய முதுபெரும் புலவர், சைவசித்தாந்த வித்தகர், பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார் அவர்களைச் சைவத் தமிழுலகம் நன்கறியும். அவர்கள் “ இமிழ்கடல் ஞாலம் முழுவதும விளங்கும் தமிழ் முழுதறிந்த தன்மையர் ” ஆவர். சிறந்த பழம் பெரும் புலவர்களின் மரபில் இஞ்ஞான்று எஞ்சி நிற்கும் (The last of the Romans) செஞ்சொற் பெரும் புலவர் தலைவர், இவர் ஒருவரேயாம். இத்தகைய புலமை வித்தகர் ஒருவர் இனி தோன்றுதற்குப் பன்னூற்றாண்டுகள் செல்லலாம். திருவாசகத்திலுள்ள திருச்சதகம் நீத்தல் விண்ணப்பம் என்னும் இருபெரும் பகுதிகட்கும் தம் நுண்மாண் நுழைபுலம் தோன்ற அரிய பெரியவிரிவுரைகளை முன்னரே இயற்றியளித்துள்ள இப்பெரும் பேராசிரியர் அவர்கள் இப்போது அவற்றை அடுத்துள்ள திருவெம்பாவைக்கும் சீரியதோர் உரையொன்று வரைந்தளித்துள்ளனர் ! திருவெம்பாவை உரைகளுக்கெல்லாம் இதுவே தலைசிறந்து முதன்மை பெற்றுத் திகழ்கின்றது.

உரையின் தொடக்கத்தில் திருவெம்பாவை வரலாறு மிகச் சிறந்த ஆராய்ச்சி முறையில் பல சிறந்த நூல்களின் மேற்கோள்களுடன் விரிவாக விளக்கப் பெற்றுள்ளது. பாவை நோன்பு, மார்கழி தைந்நீராடல்கள், திருவெம்பாவையின் நுண்பொருட் கருத்தமைப்பு என்பன பற்றிய அரிய விளக்கங்கள் எல்லோர்க்கும் எளிதாக விளங்கத் தடித்த எழுத்துக்களில் தரப்பெற்றுள்ளன. “ சத்தியை வியந்தது” என்னும் தலைப்பினை ஒவ்வொரு பாடலிலும்

உரையாசிரியர் திறம்படப் பொருத்திக் காட்டுகின்ருர்! நீத்தல் விண்ணப்பத்தினை அடுத்துத் திருவெம்பாவை அமைந்ததற்குரிய காரணமும் விளங்கப்பெற்றுள்ளது. ஏலோர் எம்பாவாய் என்பது பற்றிய நல் விளக்கமும் எம் மனோர் மயக்கத்தைத் தெளிவிக்கின்றது.

மொழிக்கு மொழி தித்திப்பாகப் பாடல்களின் ஒவ்வொரு சொற்கும் சொற்ருெடர்க்கும் தொடர்புபடத் தனித் தனியே எழுதியுள்ள பதசாரங்கள் முதலியன அறிஞர்க்கு ஆராப் பெருவிருந்தாவன. வாட்டடங்கண், தேசன் சிவ லோகன், முத்தன்ன வெண்ணகையாய், ஒண்ணித்தில நகை யாய், வண்ணக்கிளி மொழியார், விண்ணுக்கு ஒரு மருந்து, வேத விழுப்பொருள், கண்ணுக்கினியான், கோலமும் சீல மும், ஏலக்குழலி, மானே உன்னைப் பிரானுகப்பெற்ற உன் சீரடியோம் உன்னடியார் தாள் பணிவோம், பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை, ஏருருவப் பூம்புனல் பாய்ந்தாடு, உடையாள்எம்மையாளுடையாள் எம்பிராட்டி கொங்குண் கருங்குழலி, நம் இல்லங்கள் தோறும் எழுந் தருளும் சேவகன், பாடி நலந் திகழ, விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்ருற்போல், எம் அச்சத்தால் ஒன் றுரைப்போம் என்னும் பல தொடர்களுக்கு விரித்துரைத்த அரிய நுண்பொருள்கள் கற்பார்க்குக் கழிபெருஞ் சுவை பயப்பன.

'பைங்குவளைக் கார்மலரால்' என்னும் பாடலில் தீக்கை முறைகள் அமைந்துள்ளனவாக விளக்கிய திறம் ஆசிரியரின் நுண்மை மிக்க உண்மையறிவின் பெற்றி (Originality)யினைப் புலப்படுத்துகின்றது! அறிஞர்கள் பலர்க்கும் பெருமயக்கம்விளைத்துவந்த தோழம், ஏழில், ஆழி யான் அன்புடைமை, உங்கையிற்பிள்ளை உனக்கே அடைக் கலம் என்பனவற்றிற்கு வரையப்பெற்றுள்ள உரை நலங் கள் 'பொன்னினும் மணியினும், போற்றத்தகுவன: இடை யிடையே வரும் பல மேற்கோள்களின் நலங்களும், தடை விடைகளின் அருமைப்பாடுகளும் நவில்தொறும் நயம் பயப் பனவாம்! இவ்வுரை எளிய இனிய தெளிவான சீரிய செவ் விய நடையில் அழகுற அமைந்துள்ளது! இவ்வுரையினைப் பயில்தோறும் ஆசிரியரது செந்தமிழ் நூற்பெரும்புலமை யும், சிவனடிப் பேரன்பும், திருவாசகத்தென்றமிழ் மறையி

லுள்ள இணையற்ற ஈடுபாடும் பளிங்கென நிழலாடி விளங்கித் தோன்றுகின்றன! "மானுடம் இவர்தாம் அல்லர் நற்பெருந் தெய்வம்" என்னும் ஒருவகை எண்ணம் நமக்கு எழுகின்றது! சிவஞானபோதப் பேருரைக்குப் பின்னர்த் தமிழ் மொழியில் தோன்றிய தலைசிறந்த பேருரை நூல் இதுவே எனலாம். நக்கீரர், இளம்பூரணர், பேராசிரியர், அடியார்க்கு நல்லர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் பரிமேலழகர், சிவஞான முனிவர் போன்ற சிறந்த உரையாசிரியர்களின் வரிசையில் ஒருவராக நம் பண்டிதமணி அவர்களும் இனி இடம் பெற்று இலங்குவர் என்பதில் தடையில்லை. இங்ஙனம் அவர் தம் "**பெயர் பொறிக்கும் பேராண்மை** யுடையதாக இவ்வுரை திகழ்கின்றது. தமிழ்மொழி யுள்ளளவும் திருவாசகம் நிலைத்து நிற்கும்; திருவாசகம் உள்ளளவும் பண்டிதமணி அவர்களின் உரையும் திருப்பெயரும் என்றும் குன்றாது நீடினிது நின்றிலங்கும்! இறையருளால் அவர்கள் இன்னும் நெடுங்காலம் வாழ்ந்திருந்து திருவாசகம் முழுமைக்கும் அரிய பெரிய தமது விரிவுரையை இயற்றியளித்து நம்மனோர்க்கு நலம் செய்வாராக! —சு. இளவழகன்

2. நானிலைச் சதகம் :—தண்டபாணி சுவாமிகள் இயற்றிய நூலும், உரையும் அடங்கியது. தவத்திரு. கந்தசாமி சுவாமிகள் நினைவு மலராகக் கோவை நாகம்மை அவர்கள் வெளியிட்டது. விலை அணா 8. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கின்ற நான்குநிலைகளையும் தெளிவாகக் கூறும் நூல். பலர் கொள்ளும் வேற்றுமைகளும், ஐயங்களும் போக்கப்பட்டிருக்கின்றன.

3. தெய்வநெறி வெளியீடுகள் :—மக்களுக்குத்தெய்வநெறிகளைக் கற்பிக்கும் எண்ணத்துடன், 30 துண்டுப் பிரசுரங்கள் வெளிவந்துள்ளன. தேவாரம், திருப்புகழ் முதலிய அருட் பாடல்களிலிருந்து பொறுக்கி யெடுத்த பாடல்களைக் கொண்டது. திருவல்லிக்கேணி, ஜெனரல் சாமி நாய்க்கன் தெரு, நெ. 22, திரு. C. S. தாமோதர முதலியார் அவர்களுக்கு இரண்டணா அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். — ப-ர்.

செய்தித் திரட்டு

1. 28-2-53—1-3-53 : திருப்பேரூர் ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகள் குருபூஜை, திரு. சச்சிதானந்தம்பிள்ளை அவர்கள் தலைமையில் சொற்பொழிவுகள் நடந்தன. ஆசிரியர் வரவேற்பு நிகழ்த்தினர். திரு. சிவக்கவிமணி, ஆசிரியர் பழனி, ஆசிரியர் ஔவை துரைசாமி பிள்ளை முதலியோர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள். 1–வது நாள் அருள் நெறித் திருக்கூட்டம் நடந்தது. மயிலம் துரைசாமி ஐயர், திரு மீனாட்சிசுந்தரம் முதலியார், ஆசிரியர் தங்கவேலு முதலியோர்கள் பேசினர்கள். 'கொலை மறுத்தல்' என்பதைப் பற்றி வாக்குவாதம் மங்கையர்களாலும், 'வள்ளுவரும் கடவுள் நெறியும்' என்பது பற்றிய பேச்சுப்போட்டி ஆண்பிள்ளைகளாலும் நடத்தப்பெற்றன. பரிசுகள் தரப்பட்டன.

2. 6–3–53—10–3–53 இந்துமத மகாநாடு : மண்டைக்கீடு, திருவிதாங்கூர், தேவியின் உற்சவத்தை ஒட்டி மகாநாடு நடத்தப்பட்டது. அநேக அறிஞர்கள் பங்கெடுத்துக் கொண்டார்கள். ஆசிரியர் தலைமையில் 15 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆசிரியர் 'அப்பர் அல்லது முதுமையின் பொறுமை' என்னும் பொருள் பற்றிப் பேசினர்கள். மற்ற விவரங்களை நாட்டு ஒலியில் காண்க.

3. 12–3–53—14–3–53. முருகன் செந்தமிழ்க் கழகம், மயிலம் ஆண்டுவிழா, கி. வா. ஜெகந்நாதன், சச்சிதானந்தம் பிள்ளை, ஈரோடு மீனாட்சிசுந்தர முதலியார் முதலியவர்கள் தலைமையில் பேச்சுகள் நடைபெற்றன.

4. 19–3–53—30–3–53வரை மயிலம், திருமுருகன் பங்குனிப் பெருவிழா. பதினொரு நாள்களும் பல அறிஞர்கள் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்கள்.

கோவைத் தமிழ்ச் சங்கம் : நிகழ்ச்சிகள் :—8–3–53 திருவாசகம் என்னும் பொருள் பற்றிக் கோவை சிவக்கவிமணி அவர்களும் பண்டிதர் D. N. ஆறுமுகம் பிள்ளை அவர்களும் சொற்பொழிவு ஆற்றினர்கள்.

15-3-53 சித்திரக்கவி கலியாணசுந்தரக் கவுண்டர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் திருவாசகத்தைப் பற்றி விரிவுரை ஆற்றிய பின்னர், பண்டிதர் துரைசாமி முதலியார் "பேச்சு" என்ற தலைப்பில் சிலப்பதிகாரம் இராமாயணம், திருக்குறள் முதலிய நூல்களிலிருந்து மேற்கோள்களுடன் பேசினார்கள்.

22-3-53. பேரூர் தமிழ்ப் பேராசிரியர் A. கந்தசாமி பிள்ளை அவர்களின் தலைமையில் வித்வான்-திரு. கிருஷ்ணசாமி அவர்கள் "உவமை நயம்" என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்.

சென்னை சைதாப்பேட்டை திரு. சிவசுப்பிரமணியர் திருக்கோயிலில்: 19-2-53 முதல் 2-3-53 வரை நடைபெற்ற பெருவிழாவில் நாள்தோறும் பெருமான் வீதி வலத்தின்போது இரவு காலங்களிலும், மூன்றும் நாள் காலையிலும் புதுவை. த. நடராசன், S. R. S. பாலசுந்தரம் ஆகியோரால் தேவாரத் திருப்புகழ் (பாராயணம்) ஓதுதல் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

2. வார வழிபாட்டுக் கழகம் வேலூர்:—இக்கழகச் சார்பில் 5-3-53 அன்று சா. இராஜாராம் பிள்ளை அவர்கள் தலைமையில் பெரியபுராணச் சொற்பொழிவு நிறைவு விழா நடைபெற்றது. பெரியபுராணச் சொற்பொழிவாளர் காஞ்சிபுரம் திரு. இராமநாதன் அவர்களைப் பாராட்டியதோடு கழகச் சார்பில் திருமுறைப் பாடல்கள் பன்னிரண்டு அடங்கிய கழக வெளியீடு ஒன்றும் வழங்கப் பெற்றது.

சென்னையில்
பெரியபுராண விரிவுரைகள்

சூளையிலுள்ள சென்னைச் சிதம்பரேசுவரர் தேவஸ்தானத்தின் ஆதரவில் 22-2-53 முதல் 20-3-53 வரை திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் பெரிய

புராணம்பற்றி இருபத்தொரு சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். தினந்தோறும் ஏராளமான ஆண்களும் பெண்களும் திரண்டு வந்து கேட்டு மகிழ்ந்தனர். இச்சொற்பொழிவுகளின் பூர்த்தி விழாவானது 20–3–53 அன்று முன்னாள் அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது சிவனடியார்சார்பாகத் திருவாசகமணிக்கு உபசாரப்பத்திரம் ஒன்று வழங்கப்பெற்றது. திரு. பக்தவத்சலம் அவர்கள் பெரியபுராணத்தின் சிறப்பைப் பற்றியும் சொற்பொழிவாளரின் திறத்தைப் பற்றியும் பேசினார்.

21-3–53 அன்று திருவாளர்கள் க. சோமசுந்தரம் செட்டியார், வித்வான் நடேச ஆச்சாரியார், ச. சிவகுமாரன் முதலியோர் பெரியபுராணத்தைப் பற்றியும் சொற்பொழிவுகளைப் பாராட்டியும் பேசினார்கள்.

21-3-53 அன்று சுமார் ஆயிரம் பேர்களுக்கு அன்னதானம் செய்யப்பட்டது.

22–3–53 ஞாயிறன்று சைவ சமயாச்சாரியர்களைக் கொண்ட ரதத்துடனும், சைவத் திருமுறைகளை ஏந்திய யானையுடனும் ஏராளமான ஆண்களும் பெண்களும் சூழ வீதிகளின் வழியே ஊர்வலமாகச் சென்றனர். அப்போது திரு. சங்கரலிங்க நாயகரின் தேவார கோஷ்டியும் பஜனை செய்துவந்தது. திருவாளர்கள் திருப்புகழ்மணி டி. எம். கிருஷ்ணசாமி ஐயர், இளவழகனார், ச. சச்சிதானந்தம் பிள்ளை, திருவாசக மணி, பஞ்சரத்னம் பிள்ளை, சாமி வேலாயுதம் பிள்ளை, ஆடலரசன் முதலியோர் திருமுறையின் சிறப்பைப்பற்றி வீதிகளில் ஆங்காங்கே சொற்பொழிவாற்றினர். பல சிவனடியார்களுக்கும் மகேஸ்வர பூஜை நடைபெற்றது.

இவ்வளவு சிறப்பான முறையில் இதுவரை பெரிய புராணச் சொற்பொழிவும் திருமுறை ஊர்வலமும் நடைபெறவில்லை என்றே கூறலாம்.

CONNEMARA PUBLIC LIBRARY
18 JUL 1955